janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 மார்ச் 12 - மார்ச் 18 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 49






# மாமனிதர் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா!

## சட்டம் ஒழுங்கை கெடுப்பவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ப.மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு விழா மார்ச் 04 அன்று மாலை 4 மணி அளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமை தாங்கினார். கே.சுப்பராயன் எம்.பி. முன்னிலை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி முன்னாள் எம்.எல்.ஏ. வரவேற்புரை நிகழ்த்தினார்.

தோழர் ப.மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு மலரினை மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வெளியிட்டார். மலரினைப் பெற்றுக் கொண்டு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விழாவில் பேருரை ஆற்றினார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ எம்.பி., சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., இ.தே.மு.லீக். தலைவர் கே.எம். காதர்மொய்தீன், ம.ம.ம. பொதுச் செயலாளர் ப.அப்துல் சமது எம்.எல்.ஏ., கொ.ம.தே.க. தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன், த.வா.க. தலைவர் தி.வேல்முருகன் ஆகியோர் பேசினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் நன்றி கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின்

தோழர் ப.மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டுநிறைவுவிழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

உலகில் தலைசிறந்த மனிதர்களை 'மாணிக்கம்' என்பார்கள். 'மனிதகுல மாணிக்கம் என்றுகூட பண்பு நிறைந்த மனிதர்களை அழைத்துப்போற்றுவார்கள். அந்த வகையில் பிறக்கும்போதே மாணிக்கமாக பிறந்தவர்தான் தோழர் ப.மாணிக்கம் அவர்கள்.

மாமனிதர் மாணிக்கம் அவர்களுடைய நூற்றாண்டு விழா இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாமெல்லாம் பெருமைப்படத்தக்க வகையில்



எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விழாவில் பங்கெடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்குநான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

அதிலும், இன்னொரு மனிதகுல மாணிக்க மான தோழர் அய்யா நல்லகண்ணு அவர்கள் இந்த மேடையில் நம்மோடு இருக்கிறார்கள். தியாகத்தின் திருவுருவாக இருக்கின்ற அவர் வாழும் காலத்தில் நாமெல்லாம் வாழ்கிறோம் என்பதே நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை! இத்தகைய தீரமிக்க தியாகிகளின் இயக்கம்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி வளரக் காரணம் அதனுடைய கொள்கைகள் மட்டுமல்ல. இதுபோன்ற தன்னலமற்ற தலைவர்களினால் தான். அரசியல் வெற்றி தோல்விகளுக்கு அப்பாற்பட்டு பாட்டாளிகளுக்காகத் தன்னுடைய வாழ்நாளின் இறுதிவரை உழைக்கும் தலைவர்களாக இந்தத் தலைவர்கள் அமைந்திருப்பார்கள். அத்தகைய மாபெரும் தலைவர்களில் ஒருவர்தான் மாமனிதர் மாணிக்கம் அவர்கள்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் அவர் வளர்ந்தாலும், அவருடைய தந்தை பக்கிரிசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர். அந்தக் கொள்கையில் அழுத்தமான பற்றுக் கொண்டவர். எனவே, தோழர் மாணிக்கம் அவர்களுக்கும், எங்களுக்கும் பூர்வகாலத் தொடர்பு என்பது அமைந்திருக்கிறது.

மிக இளமைக் காலத்திலேயே, போராளியாகத் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் மாணிக்கம் அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்றபோதும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதன் காரணமாக, பல்கலைக்கழகத்தில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

பின்னர் தீவிரமான அரசியலில் அவர் ஈடுபட்டார். மாநிலம் முழுவதும் மாணவர்களைத் திரட்டத் தொடங்கினார். அவருடைய செயல்பாடுகளைப் பார்த்து நெல்லை மாவட்டத்தில் இயக்கத்தை வளர்ப்பதற்காக கட்சித் தலைமை அவரை அனுப்பி வைத்தது.


தஞ்சை மாவட்டம் வலங்கைமானில் பிறந்து, கடலூரில் வளர்ந்து, சிதம்பரத்தில் பயிற்சி பெற்று, திருநெல்வேலியில் கட்சி வளர்த்து தமிழ்நாடு முழுமைக்குமான செயலாளராக 15 ஆண்டு காலம் இருந்து பணியாற்றியவர்தான் தோழர் மாணிக்கம் அவர்கள். பொதுவுடைமை இயக்கத்துக்காக தன்னையே அர்ப்பணித்தவர்! 77 ஆண்டுகாலம் வாழ்ந்தார் என்றால், அதில் ஐம்பது ஆண்டு காலம் பொதுவுடைமை இயக்கத்துக்காக, பொதுவுடைமைக் கொள்கைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு என்பது, தியாக வரலாறு!

தொடர்ச்சி 8ம் பக்கம்



கட்சிக் கடிதம்

# இருபது கோடி பேருக்கு வேலை! ரூ.15 லட்சம் பணம் எங்கே!



போர்க்குணமிக்க தோழர்களே!

**பாஜகவின் இன்றைய மாநிலத் தலைவரும், முன்னாள் ஐ.பி.எஸ்.சும், நாளைய கவர்னருமான திருவாளர் அண்ணாமலையார் அரிய ஆலோசனை ஒன்றை வழங்கி உள்ளார்.**

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்தலில் அளித்திட்ட வாக்குறுதிப்படி, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் விரைவில் வழங்கப்படும் என்று தெரி வித்தார். முதல்வரின் அறிவிப்பு மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இதைக் கேட்டு பொங்கி எழுந்த அண்ணாமலை, முதலமைச்சர் அறிவித்தது வரவேற்கத்தக்கது என்றாலும், நிலுவையுடன் (அரியர்சுடன்) வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.**

அதாவது திரு மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் கணக்கிட்டு வழங்கிட வேண்டும். தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டு காலமாகிறது. அந்த பதினெட்டு மாதங்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என கணக்கிட்டு ரூபாய் 18 ஆயிரத்தையும் வழங்கிட வேண்டும் என்று கூறியுள்ளார்.

அண்ணாமலையின் இத்தகைய மூளைக்கு நன்றி சொல்ல வேண்டும். அவரின் புதிய கண்டுபிடிப்பால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் லம்பாக ரூபாய் பதினெட்டா யிரம் கிடைக்கப் போகின்றது.

என்ன காரணத்தாலோ நமக்கு 2014 ஆம் ஆண்டு, மோடியும் நினைவுக்கு வந்து கொண்டே இருக்கின்றார். ரயில் நிலையத்தில் டீ விற்ற டீ பாய் மோடியை மறக்கவே முடியவில்லை.

குஜராத்தில் முதல்வராக கொலோச்சிய காலத்தில் கோத்ரா ரயில் நிலையத்தில், ரயில் பெட்டிகள் எரிந்தன. எப்படி தீ பற்றியது, யார் காரணம்? எந்த உண்மையும் இது நாள் வரை தெரியவில்லை. பெட்டிக்குள் இருந்த சில சாமியார்கள் அக்கொடிய தீயில் எரிந்தனர் என்பது உண்மையே. அத்தகைய கொடூர செயலுக்கு காரண கர்த்தா யாரென தெரியவில்லை.

முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு மூக்கில் வேர்த்தது– சாமியார்கள் எரிந்து விட்டார்களா? கருகி கட்டையாகி விட்டார்களா? இதனை ஒருபோதும் அனுமதிக்க கூடாது. இத்தகைய படுபாதக செயலை நிச்சயமாக, உறுதியாக பாய்கள்தான் செய்திருப்பார்கள் என செய்தி பரப்பி, தனது கொலைகார கூட்டத்தை ஏவி விட, அக்கூட்டமோ வெறிபிடித்த பல நாய்கள் ஒன்று கூடி, பச்சிளம் குழந்தையை கடித்து குதறி, அதனதன் வாய்க்கு அகப்பட்ட கை, கால், கண், மூக்கு, தலை, வயிறு, குடல் என அபகரித்து, கடித்துத் தின்று சுவைத்தது போன்று வன்முறைக் கூட்டம் வெறியாட்டம் ஆடியது.

அகப்பட்ட அப்பாவி இஸ்லாமியர்கள், குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள் என்று எவரையும் விடாமல் ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்து தனது மதவெறி கோரப் பசியை தீர்த்துக் கொண்டார்கள்.

கர்ப்பிணி பெண்ணின் வயிற்றில் சூலாயுதத்தை சொருகி, வயிற்றில் வளர்ந்த கருவை வெளியே எடுத்து இரக்கமற்ற முறையில் சூலாயுதத்தில் சொருகிக்கொண்டு ஊர்வலம் சென்றார்கள்.

குழந்தைகளின் கால்கள் இரண்டையும் சேர்த்துப் பிடித்து உயரே தூக்கி பாறையில் அடித்து மண்டை சிதறச் செய்தார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினரே படுகொலைக்கு உள்ளான கொடூரம் உட்பட அனைத்து கோர கொடிய சம்பவங்கள் நடந்தேறியது.

சகிக்க முடியாத இக்கொடுமையை அன்றைய பிரதமர் வாஜ்பாய் – இக்கொடுங்கோலுக்கு பின்னர் எந்த முகத்தை வைத்துக்கொண்டு வெளிநாடுகளுக்கு செல்வேன் என்று புலம்பித் திரிந்தார். படு பாதக செயலுக்கு காரணமானவர் குஜராத் முதல்வர் என பகிரங்கமாக குற்றம் சாட்டப்பட்டது.

அவர் மீது வழக்கும் தொடரப்பட்டது. வழக்கு நடைபெற்று ஆதாரங்கள் இல்லை எனக் கூறி நீதிமன்றம் விடுதலை செய்தது. நீதிமன்ற தீர்ப்பு மோடி குற்றம்மற்றவர் என தீர்ப்பு வழங்கியபோதும், உண்மைகளை மறுத்து விட முடியுமா? மறைக்கத்தான் முடியுமா?

முடியாது என்பதனைத்தான் இலண்டன் மாநகரிலிருந்து இயங்கிக் கொண்டுள்ள புகழ்மிக்க பி.பி.சி. நிறுவனம் தற்போது அன்று நடைபெற்ற கொடூரத்தை ஆவணப்படமாக தயாரித்து வெளியிட்டு உலகெங்கும் மோடியின் முகத்திரையை கிழித்து அம்பலப்படுத்தியது.

உண்மைகள் வெளியானது கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத ஆர்.எஸ்.எஸ். கும்பல் குறும்படத்திற்கு தடை விதிக்க அரசுக்கு ஆணை யிட்டது. குருபீடத்தின் உத்தரவை ஏற்று பாஜக அரசு அமல்படுத்தவும் செய்தது. ஆனால் உலகெங்கும் தடைகளைத் தகர்த்து ஆவணப்படம் ஆங்காங்கே வெளியிடப்படுகின்றது.

கொடூர கொலைகார பாதகர்களுக்கு பாராட்டுத் தெரிவித்து, அவரை நாட்டின் பிரதமர் வேட்பாளராக முன் நிறுத்தியது.

பிரதமர் வேட்பாளரான, ஆக சிறந்த நடிகரான நரேந்திர மோடி தீவிர தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

நான் ஆட்சிக்கு வந்தால் பிரதமரானால், நீங்கள் என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தால், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை கொடுப்பேன்,

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கள்ளப் பணமான கருப்புப் பணத்தை மீட்பேன்; நாட்டிற்கு கொண்டு வருவேன். கொண்டு வந்த பணத்தை சிந்தாமல், சிதறாமல் இந்திய குடிமகன் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 15 லட்சம் வங்கிக் கணக்கில் வரவு வைப்பேன்

என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்து, வாக்குகளைப் பெற்று வெற்றியும் பெற்று ஆட்சி அமைத்தது மட்டுமல்ல, இரண்டாம் முறையும் வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார். பிரதமராகவும் கோலோச்சி வருகின்றார். வாக்குறுதி அளித்து ஒன்பது ஆண்டுகள் நிறைவு பெற்று, பத்தாம் ஆண்டில் 2024ல் அடியெடுத்து வைக்க உள்ளார்.

2014 ஆம் ஆண்டு அளித்திட்ட வாக்குறுதியின் படி, இதுநாள்வரை 18 கோடி பேருக்கு வேலை வழங்கி யிருக்க வேண்டும்! வழங்கினாரா? வேலை வழங்காதது மட்டுமல்ல, வேலையில் இருப்பவர்களையும் வீட்டுக்கு அல்லவா அனுப்பிக் கொண்டுள்ளார்.

இராணுவத்தில் பணியில் சேர்ந்தால் குறிப்பிட்ட காலம் வரை பணியாற்றி மாதந்தோறும் நல்லதொரு ஊதியத்தை பெறுவது மட்டுமல்ல, வயது முதிர்ச்சியால் அவர் பணிக் காலம் முடிந்து ஓய்வு பெற்றால், ஓய்வ பெற்ற நாள்தொட்டு அவர் இயற்கை எய்தும் வரை அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. அவரது மரணத்திற்கு பின்னர் அவரது மனைவி அல்லது வாரிசுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது.

இதனை முற்றாக சீர் குலைத்து அக்னிபாத் திட்டம் என்ற பெயரால், பணியில் சேர்ந்த நான்கு ஆண்டுகளுக்கு மட்டுமே வேலை, அதன் பின்னர் வேலை கிடையாது என்பது மட்டுமல்ல, ஓய்வூதியமும் கிடையாது, ஓடிப் போ! என விரட்டியடிக்கின்ற திட்டத்தை அல்லவா செயல்படுத்தி உள்ளார்.

இரக்கமற்ற நெஞ்சினை உடைய மோடியைப் பார்த்து எங்கே என் வேலை? என உரக்க முழக்கமிட்டு தமிழகத்தில் நான்கு முனைகளில் இருந்து இளைஞர் பெரும்படை போர் கோலம் பூண்டு அணிவகுத்து வருகின்றது.

2014 ஆம் ஆண்டு தலைக்கு ரூ.15 லட்சம் தருவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி கொடுத்திட்ட நாசகர நரேந்திர மோடியே எங்கே எங்கள் பணம் என்று கேட்டு வருகின்றது.

2014 ஆம் ஆண்டு முதல் கடந்த 9 ஆண்டுகளுக்கும் ரூ.15 லட்சத்துக்குரிய வட்டியோடு சேர்த்து கொடு என்று அண்ணாமலை கேட்டு வாங்கிக் கொடுத்திட வேண்டும் என்று உரக்க முழக்கமிட்டு வருகின்றது இளைஞர்களின் பெரும்படை.

இவைகள் மட்டுமல்ல, இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. ஒன்றிய அரசே! மாநில அரசே! அரசுப் பணிகளில் உள்ள காலியிடங்கள் அனைத்தையும் நிரப்பு.


பகுதிநேர ஊழியர்கள் என்று பழிவாங்காதே, நிரந்தரப்படுத்து. அவர்களின் குறைந்தபட்ச வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிட ஊதியத்தை உயர்த்து.

பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்காதே!

கார்ப்பரேட் நிறுவனங்கள் கோடி கோடியாய், பல்லாயிரம் கோடி ரூபாய்கள் கடன் பெற வழிவகை செய்திட்ட மோடி அரசே அதனை முழுமையாக வசூல் செய்!

வராக் கடன் எனக் கூறி பெரு நிறுவனங்களுக்கு மக்களின் மனத்தை சிறிதும் தயக்கமின்றி ஆண்டுதோறும் தள்ளுபடி செய்யும் மோடி அரசே, இரக்கமற்ற கொடிய அரசே!

ஏழை வீட்டு பிள்ளை படிப்பிற்காக வாங்கிய கல்விக் கடனை தள்ளுபடி செய்ய மறுப்பது ஏன்? கடன் வாங்கினான், படித்தான், பட்டமும் பெற்றான் – ஆனால்,




வேலை இல்லையே! எங்கிருந்து கடனை திருப்பிச் செலுத்துவான்!

அம்பானி, அதானி கும்பல்களை ஏஜெண்டுகளாக நியமனம் செய்து, அத்தகைய அடாவடி கும்பல் கடன் பெற்ற மாணவன் வீட்டிற்கு சென்று, அச்சுறுத்தி அவமானப்படுத்தும் கொடுஞ்செயலை செய்யும் கொடிய அரசே இது நியாயம் தானா? என வினா தொடுத்து வருகின்றது இளம்படை.

பெற்றோரே, எமை ஈன்ற தாய்மாரே, அன்பு சகோதரனே, ஆருயிர் சகோதரியே நாங்கள் எழுப்பும் வினாவில் நியாயம் இல்லையா?

அநீதிக்கு எதிராக நியாயம் கேட்டு உங்கள் ஊர் நோக்கி, இல்லம் நோக்கி இளைஞர் பெரும்படை வருகின்றது.

உங்கள் வீட்டுப் பிள்ளைகள் வருகின்றார்கள். சுட்டெரிக்கும் வெயிலை பொருட்படுத்தாது விடியலுக்காக வருகின்றார்கள்.

இரவு பகல் பாராது பல்லாயிரம் கிலோ மீட்டர் தூரம் கடந்து வருகின்றார்கள்.

அவர்களை ஆரத்தழுவி உச்சி முகர்ந்து அவர்களது நெற்றியில் வீரத் திலகமிட்டு ஆரத்தி எடுத்து வரவேற்க, வழியனுப்பு வாருங்கள்.

எதிர்கால இளம் தலைமுறையை ஊக்கப்படுத்துங்கள்; உற்சாகமூட்டுங்கள். அவர்கள் மீண்டும் ஓர் விடுதலைப் போரில் பங்கேற்றுள்ளனர்.

அவர்கள் நடத்தும் நாட்டின் இரண்டாம் விடுதலைப் போருக்கு ஆதரவுக் கரம் நீட்டுங்கள். அவர்கள் போராடுவது அவர்களின் சுயநலத்திற்காக அல்ல.

நாட்டில் வாழும் அனைத்து இளைஞர்களின் நலனுக்காக, முன்னேற்றத்திற்காக, வாழ்க்கை உத்தரவாதத்திற்காக –

ஆதரிப்போம் – பங்களிப்பை செய்திடுவோம் – பங்கேற்போம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## அதிகாரப் பசி அரசியலுக்கு

# அல்லல்படும் தொழிலாளி தொடுகறியா?



டி.எம்.மூர்த்தி

**“சமூகவலைத் தளங்களில் 32 லட்சம் பேரை வைத்துள்ளோம். உண்மையோ, பொய்யோ, அது எந்தச் செய்தியாக இருந்தாலும், பாஜகவினர் நினைத்தால், அதனை ஒரு மணி நேரத்தில் நாடு முழுவதும் பரப்பி பரபரப்பை ஏற்படுத்த முடியும்” என்று அக்கட்சியின் தலைவராக இருந்த அமித் ஷா 2018 செப்டம்பர் 27ம் தேதி கூறினார். அதை இன்னொரு முறை இப்போது நிரூபித்திருக்கிறார்கள்.**

இந்தியில் பேசியதற்காக வட மாநில தொழிலாளர்கள் 10 பேரை கழுத்து அறுத்து திருப்பூரில் கொன்று விட்டதாகவும், ரயில் பாதை ஓரம் சடலங்கள் கிடப்பதாகவும், மார்ச் 20க்குள் இந்திக்காரர்கள் வெளியேறாவிட்டால் ஒவ்வொரு ஆலைக்குள்ளும் வைத்து அவர்கள் கொல்லப்படுவார்கள் என்றும் தமிழ்நாடு தமிழருக்கே என்றும் தமிழ்நாட்டுக்காரர்கள் மிரட்டுவதாகவும், தமிழ்நாட்டை விட்டுப் போய் விடுங்கள், ஏதும் நேர்ந்தால் தமிழ்நாடு அரசு அதற்கு பொறுப்பு இருக்காது என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியிருப்பதாகவும் சமூக வலைத்தளங்களில் படங்களோடும், வீடியோக்களோடும் பொய்ச் செய்தி மின்னல் வேகத்தில் பரப்பப்பட்டது. தைனிக் பாஸ்கர் என்ற இந்தி செய்தித்தாளிலும் படத்தோடு கட்டுரையாக வெளியிடப்பட்டது.

கலகம் நடப்பது போன்று காட்டப்பட்ட காட்சிகளில் பல தமிழகத்தில் நடந்ததே இல்லை. கோவை, திருப்பூர் போன்ற இடங்களில் எடுக்கப்பட்ட சில வீடியோக்களோடு, வெளி மாநிலத்தில் நடந்த கலகங்களைச் சேர்த்து ஒட்டி, தமிழ்நாட்டில் நடப்பது போல காண்பித்திருந்தார்கள்.

உடனடியாக கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவோரும், தொழிற்சங்கங்களும், குடிமைச் சமூகமும், தமிழ்நாடு அரசு அதிகாரிகளும் தலையிட்டு இது பொய்ச் செய்தி என்பதை வெளிச்சப்படுத்தினார்கள். பீகார் அரசின் உயர் அதிகாரிகள், சென்னைக்கும், கோவை திருப்பூருக்கும் நேரில் சென்று, கள ஆய்வு செய்து உண்மையைச் சொன்னதும் பலனளித்தது.

ஆனால் தமிழ்நாட்டின் செய்தித்தாள்கள் அனைத்திலும் வட மாநிலத்தவர்கள் தாக்கப்படுவதாக தலைப்புச் செய்தி வந்தது.

ஹோலி பண்டிகைக்காக வட மாநிலத்தவர் தம் ஊருக்கு செல்லும் நேரம் பார்த்து இச்செய்தி வெளியிடப்பட்டது, தற்செயலானதாக இருக்க முடியாது. முண்டியடித்துக் கொண்டு ரயில்களில் ஊருக்கு போகிறார்கள் என்பதைப் பார்த்த மாத்திரத்தில், அவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் ஏதோ பிரச்சினை என்றுதான் மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். அதைப் பண்டிகையோடு பொருத்திப் பார்க்க வாய்ப்பு இல்லை. ஏனெனில் ஹோலி பண்டிகை தமிழ்நாட்டில் கொண்டாடப்படுவதில்லை.

தீபாவளி, பொங்கலின்போது சென்னை நகரமே காலியாகி, தெற்கு, மேற்கு, கிழக்கு மாவட்டங்களை நோக்கி தமிழர்கள் பறக்கிறார்கள். இதையெல்லாம் வீடியோ பிடித்து, சென்னையை சேர்ந்தவர்கள் பிற மாவட்டத்தினரை மிரட்டி விரட்டுகிறார்கள் என்று செய்தி போட்டால் எவ்வளவு அபத்தமோ, அதேதான் வட மாநிலத்தினர் விஷயத்திலும் நடந்து கொண்டிருக்கிறது.

வடமாநிலத்தவர் தமிழ்நாட்டில் தாக்கப்படுகிறார்கள்; தமிழ்நாட்டு முதல்வர் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்கிறார்; அவரது பிறந்தநாளுக்கு பீகார் துணை முதல் அமைச்சர் தேஜஸ்வி யாதவ் சென்று வந்திருக்கிறார்; எனவே நித்திஷ் குமாரையும் அவர்களது கூட்டணியையும் தோற்கடித்து பிஜேபியை ஆட்சிக்கு தேர்ந்தெடுங்கள் என பீகாரில் பிரச்சாரம் செய்வதற்காகவே இவ்வளவு பெரிய பரபரப்பு திட்டமிட்டு பிஜேபியால் ஏற்படுத்தப்பட்டது.

வடவர்கள் வந்து, தமிழர்களின் வேலைகளைப் பறித்து விட்டதாக நாம் தமிழர் கட்சி போன்றவை கூச்சலிட்டு குதிக்கின்றன.

தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு முன்வரிசையில் இருக்கிறது.

**அதே நேரத்தில் தமிழ் குடும்பங்கள் இப்போது தனது குழந்தைகளை கடைக்கோ, ஹோட்டல் வேலைக்கோ, பீடி சுற்றவோ அனுப்புவதில்லை. எப்பாடுபட்டேனும் பள்ளிக்கு அனுப்புவதில் உறுதியாக இருக்கிறார்கள். பள்ளியில் இருந்து கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை, இந்திய சராசரியை விட, ஏன் உலகத்தின் சராசரியை விட, அதிகமாக இருக்கிறது.**

அறிவார்ந்த தொழில்நுட்ப வேலைகளை செய்யும் திறன் இயல்பிலேயே வளர்ந்திருக்கிறது.

எனவே கடினமான உடல் உழைப்பு செய்வதை இளைஞர்கள் தவிர்க்கிறார்கள். ஆனால் எந்த உற்பத்தியிலும் தொடக்க வேலை உடல் உழைப்பு சார்ந்ததாகவே இருக்கிறது. ‘அன்ஸ்கில்டு’ எனப்படும் வேலைத் திறன் குறைவானவர்கள், வட மாநிலத்திலிருந்து இங்கு வந்து அந்த வேலைகளைச் செய்கிறார்கள். அவர்கள் அந்த வேலையை செய்தால் தான், உற்பத்தியின் அடுத்த கட்டமான தொழில்நுட்ப வேலைகளே உருவாகும். ஆகவே வடநாட்டினர் இங்கு வந்து உடல் உழைப்பு வேலைகளை செய்யாவிடில், தமிழர்களுக்கான வேலைகளும் சேர்ந்து பறிபோகும் என்பதுதான் உண்மை நிலை.

தமிழ்நாட்டுக்காரர்களுக்கு வேலை கொடுத்தால், வாரச்சம்பளம் வாங்கிக் கொண்டு, பிறகு இரண்டு மூன்று நாட்கள் வேலைக்கு வருவதில்லை என தமிழ்நாட்டு முதலாளிகள் குற்றம் சாட்டுகிறார்கள். உற்பத்தி வேண்டும், வேலை நிரந்தரமானது எனில் அங்கு தொழிலாளியையும் நிரந்தரமாக வேலைக்கு வைத்துக் கொள்வதில் இவர்களுக்கு என்ன தடை? சம்பளம், போனஸ், பிராவிடண்ட் பண்ட், இ எஸ் ஐ, கிராஜுவிட்டி, பென்ஷன் இவற்றையெல்லாம் தந்தால் சமூகப் பாதுகாப்பு தொழிலாளிக்கு உறுதிப்படுத்தப்படும். இவையெல்லாம் சட்டப்படி தரவேண்டியவைதான்.

ஆனால் இதைச் செய்வதற்கு முதலாளிகளுக்கு விருப்பமில்லை.

தான் சொல்வதை எல்லாம் கேட்டு, அடித்தாலும் திட்டினாலும் பொறுத்துக் கொண்டு, அதிகக் கடுமையான வேலையை, கூடுதல் நேர உழைப்பும் தமக்குக் கிடைக்க வேண்டுமென முதலாளிகள் விரும்புகிறார்கள். சுயமரியாதையோடு சேர்ந்து வளர்ந்த தமிழ் தொழிலாளி இந்த நிலையில் நீடிக்க உடன்படுவதில்லை.

எனவே ஏஜெண்டுகளை வைத்து வட மாநிலத்தவரை, இங்கு கூட்டி வந்து வேலை பார்க்க வைக்கிறார்கள். முதலாளிகளின் ஒட்டச்சுரண்டுகிற பெருலாப வேட்கை தான் புலம்பெயர்தலை ஊக்குவிக்கிறது. இதனை தமிழர் நலன் பேசுகிறவர்கள் கணக்கில் எடுப்பதே இல்லை. நிரந்தர வேலையை ஏன் அற்றைக்கூலியாக்குகிறாய்? ஒப்பந்தத் தொழிலாளியாக மாற்றுகிறாய் என்ற கேள்வி சமூகத்தில் ஓங்கி எழுப்பப்படவில்லை. அந்த மெல்லிய குரல், தமிழர்வடவர், சாராயக்கடை, வேலைக் கலாச்சாரம் இல்லை என்பது போன்ற பெரும் கூச்சல்களில் எடுபடாமல் போகிறது.

தமிழ்நாட்டில் தொழில் முதலீடு, நிதி முதலீடு, லேவாதேவி, மொத்த வியாபாரம் ஆகியவற்றை செய்து கொண்டிருக்கும் வட இந்தியர்கள் தலை முறை தலைமுறையாகத் தங்கி, இங்கு சொத்துக்கள் வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் வட மாநிலத் தொழிலாளியோ, இங்கு தங்குவதற்குத் தகுதியற்ற தகரக் கூடுகளுக்குள் தங்கிக் கொண்டு, கூடுதல் நேரம் உழைத்து, சம்பளத்தை தனது மாநிலத்தில் இருக்கும் குடும்பத்திற்கு அனுப்பி வைப்பதே குறியாக இருக்கிறான். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு வேகமாக சொந்தமாக மாநிலம் திரும்பவே விரும்புகிறான். இங்கு குடும்பத்தோடு தங்கி சொத்துக்களை வாங்கப் போவதில்லை; இங்கு கிடைக்கும் ஊதியத்தின் மூலம் சொத்துக்கள் வாங்குவது சாத்தியமும் இல்லை.

ஒரு காலத்தில் தமிழர்கள் பம்பாய் நகரத்திற்கு புலம்பெயர்ந்து சென்று தமது கடும் உழைப்பால் அந்த மாநிலத்தைச் செல்வபுரியாக்கினர். அந்த மாநிலம் தான் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டுக்கு முதல் இடத்தில் இப்போது இருக்கிறது. அப்போது சிவசேனை தமிழர்களை அங்கிருந்து விரட்டியது.

அது போலவே வட மாநிலத்தவர், தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார பெருக்கத்திலும், தனது கடும் உழைப்பைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வன்மத்தைக் கக்குவது பொருத்தமற்றது.

உழைப்பவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கை தரத்தைப் பாதுகாக்கும் அளவுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும், அது எந்த மொழி பேசுபவராக இருந்தாலும். இது வழங்க மறுக்கப்படுகிறது என்பதே உண்மை நிலை. அரசுகளின் தொழிலாளர் விரோத கொள்கைகள் முதலாளிகளின் கொடும் சுரண்டலுக்கு ஆதரவுதருகின்றன.

தமிழ் தொழிலாளர்கள் உரிய ஊதியம் கேட்டால், சட்ட உரிமைகளை கோரி சங்கம் வைத்தால், அதனைத் தொழில் வளர்ச்சிக்கு எதிரானதாக வலதுசாரிகள் சித்தரிக்கிறார்கள்.

தொழிலாளர்களின் நலம், அவர்களது குடும்பத்தின் எதிர்காலம் மற்றும் வாழ்க்கைத் தரம், மாநிலத்தில் தொழில் வளம், வளர்ச்சி இவைகள் பற்றிய அக்கறையே இல்லாமல், தமது அரசியல் சுய லாபங்களுக்காக கூச்சலிடுவோரைக் கண்டறிந்து பிரித்துப் பார்க்க உரிய விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும்.

தொடர்புக்கு: 94443 60869



# சர்வதேசப் பெண்கள் தினம்: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து

சர்வதேசப் பெண்கள் தினத்தில், ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் பாலினச் சமத்துவத்திற்கு ஆதரவாகவும் பற்றுறுதியுடன் நின்று போராடும் ஒவ்வொருவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது தார்மிக ஆதரவு மற்றும் ஒத்துழைப்பை அளிக்கிறது.

சமத்துவத்திற்கான இந்தப் பாதையில் உடன் பயணிப்பவர்களை நாங்கள் வாழ்த்தி வணங்குவதுடன், பெண்கள் இயக்கம் போராடி வென்றெடுத்தச் சாதனைகளை அழிக்கும் சக்திகளை முறியடிக்கவும் வேண்டுகிறோம்.

சோவியத் ருஷ்யாவில் சர்வதேசப் பெண்கள் தினம், பெண்கள் வாக்குரிமையை வென்ற பிறகே, அதிகாரபூர்வ விழாவாகக் கொண்டாடப்படத் தொடங்கியது.

அந்தத் தருணத்தில், ருஷ்யப் புரட்சியின் தலைவர் விளாடிமிர் லெனின், “முதலாளித்துவத்தின் கீழ் மனித குலத்தின் செம்பாதியான பெண்ணினம் இரண்டு மடங்கு ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவர்” என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பெண்கள் இயக்கத்தின் புகழார்ந்த பெருந்தலைவர் தோழர் கீதா முகர்ஜி பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவுக்காக அர்ப்பணித்தவர்.

நாம் அவருடைய பிறந்த நாள் நூற்றாண்டை இந்த ஆண்டு கொண்டாடி அனுசரித்து வருகிறோம், எனவே நாம் போராட்டத்தைத் தீவிரமாக்கி பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றச் செய்து, பெண்களின் நியாயமான உரிமையை வென்றெடுப்பது அந்தப் பெரும் தலைவரின் நினைவுக்கு மிகப் பொருத்தமான நினைவஞ்சலியாக இருக்கும்.

சர்வதேசப் பெண்கள் தினத்தில் உறுதி ஏற்போம்!

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 49

# அதிமுக தோல்வியில் பிஜேபிக்கு பங்கு இல்லையா?

"ஈரோடு கிழக்கு தொகுதியின் வாக்காளர்கள், அஇஅதிமுகவை வெளியே போ என்று கதவைக் காட்டி விட்டார்கள். கொங்கு மண்டலம் எங்கள் கோட்டை என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் 66 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டு இருக்கிறார்கள்" என்று சொல்லி இருப்பவர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் உள்ள கட்சி ஒன்றின் தலைவர் அல்லர். அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்த பிஜேபியின் தலைவர் தான்!

பிஜேபியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவிலிருந்து சிலர் அஇஅதிமுகவுக்கு சென்று சேர்ந்திருப்பதன் எதிரொலி இது. "கூட்டணி கட்சியிலிருந்து வருபவரை அந்தக் கட்சி எவ்வாறு சேர்த்துக் கொள்ளலாம்" என்ற கேள்வி வேறு!

இதையெல்லாம் சொன்ன அந்த அமர் பிரசாத ரெட்டி என்ற பிஜேபி தலைவர், இனி தமிழ்நாட்டில் எதிர்காலம் பிஜேபியின் கைகளில் தான் என்றும் தெரிவித்திருக்கிறார். அப்படியானால் ஈரோடு கிழக்கில் பெற்ற தோல்வி அதிமுகவுக்கு மட்டும்தானா? பிஜேபி ஓரமாக நின்றது?

சட்டப்பேரவை உறுப்பினரான வானதி சீனிவாசன், "கட்சி விட்டு கட்சி மாறுவது வழக்கமான ஒன்றுதான். பிஜேபியிலும் அதிமுகவிலிருந்து பலர் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்கிறார்.

அதிமுகவிலிருந்து வருபவர்களை பிஜேபி சேர்த்துக் கொள்ளும்போது, பிஜேபியில் இருந்து செல்பவர்களை அதிமுக ஏன் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற கேள்விக்கு அந்த ரெட்டி தான் பதில் சொல்ல வேண்டும்.

அதிகம் பேசும் அண்ணாமலை, பிஜேபி செயல் வீரர்களை அதிமுக வேட்டையாடி வருவதாக குற்றம் சாட்டி, தன் பங்குக்கு சில முத்துக்களை உதிர்த்து இருக்கிறார். "நானும் விலைக்கு வாங்கச் செல்வது என முடிவெடுத்து விட்டால் என்னிடம் உள்ள பட்டியல் மிக நீளமானது. ஆனால் அதற்கான இடம் நேரம் ஆகியவற்றை நானே முடிவு செய்வேன்". ஆக அவர்களிடம் திட்டம் தயாராக இருக்கிறது.

அதிமுகவை எவ்வளவுக்குத் தான் இவர்கள் மிரட்டுவார்கள்? ஆளுநரிடம் அரசு எழுதிக் கொடுத்த உரையிலிருந்த, பெரியார், அண்ணா ஆகிய பெயர்களை அவர் உச்சரிக்கவே மறுத்து விட்டார். கட்சியின் பெயரிலேயே அண்ணாவை ஏந்தி இருக்கிற அதிமுக, அதை எதிர்ப்பதற்கு பதிலாக, ஆளுநரை ஆதரித்து பேச வேண்டிய நிலையை உருவாக்கினார்கள்.

வட மாநில தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் கொலை செய்யப்படுகிறார்கள், அடித்து விரட்டப்படுகிறார்கள் என்றெல்லாம் பொய் செய்தியை பரப்பிய போது அதிமுக என்ன செய்தது? பல ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆண்ட தமிழ்நாட்டின் கட்சி, தமிழ்நாட்டின் மீது கொலைப் பழியை, பொய்யாகத் திட்டமிட்டு சுமத்திய போது, கண்டனம் கூட செய்ய வேண்டாம், அவ்வாறு ஏதும் நடக்கவில்லை என்று சொல்லக்கூட முடியாமல் வாய் மூடி மௌனம் காத்தது ஏன்?

பிஜேபியுடன் கூட்டுச் சேர்வதால் தான் அதிமுகவுக்கு கிடைக்க வேண்டிய வாக்குகளும் குறைந்து போகின்றன என்று அந்தக் கட்சியின் தலைவர்களே சிலர் முணுமுணுத்து இருக்கிறார்கள். ஆனால் அந்த உண்மையை உலரப் போட்டுவிட்டு, பொய் காவிகளுக்கு பூஜை செய்து கொண்டிருப்பது எதற்காக?

இடைத்தேர்தலின் போது 'மீசை முளைத்த ஆம்பளையாக இருந்தால்' என்றெல்லாம் எல்லை மீறி எடப்பாடியார் பேசினார். ஒரு பெண்ணின் ஆளுமைக்கு பல ஆண்டுகள் கட்டுப்பட்டு, ஒரு பெண்ணால் முதல்வர் பொறுப்புக்கு பரிந்துரைக்கப்பட்ட அவருக்கு திடீரென 'ஆம்பளை' நினைப்பு எப்படி வந்தது எனத் தெரியவில்லை.

அந்த ஆணாதிக்க இறுமாப்பை மனதில் வைத்துக் கொண்டுதான், அம்மையாரின் கார் டயரின் முன்பு கேள்விக்குறிபோல் உடலை வளைத்தும், தவழ்ந்து சென்று காலில் விழுந்தும் வணங்கிக் கொண்டு இருந்தாரா? அல்லது எப்போதும் பெண்ணைத் தாழ்த்தி வைக்கிற சனாதன கும்பல்களோடு கூட்டு வைத்ததால் வந்த நிலை தடுமாற்றமா? அவர்தான் பதில் சொல்ல வேண்டும்.

அதிமுகவின் நீண்டகால நிலைபாடுகள் எதையும், அதன் அடையாளமாகக் கொள்ள விடாமல், தன்னைப் போன்றே தோற்றமும் உள்ளடக்கமும் கொண்டதாக மாற்றவும், கடைசியில் முழுதாக தனதாக்கி விழுங்கவும் பிஜேபி முயலுகிறது.

கட்சிக்குள் பிரிவுகளை உண்டாக்கி, மோத வைத்து தனது கைக்குள்ளாக வைத்துக் கொண்டிருக்கிறது. பழைய அமைச்சர்கள் மீது வழக்குகளை போட்டு கழுத்தில் கயிறு கட்டிப் பிடித்திருக்கிறது.

'அதிமுக ஒரு சமுத்திரம் அதில் கல் எறியாதீர்கள். கல் காணாமல் போய்விடும்' என்று அதிமுக ஜெயக்குமார் பேசியிருக்கிறார்.

மீசை வைத்த எடப்பாடியார் எப்பொழுது பேசுவார்?

# சர்வதேச பெண்கள் தினம்: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து

மனித குல வரலாற்றில் உருவான அதிகாரக் கட்டமைப்பில் நிலவி வரும் பாலின பாகுபாடுகளை தகர்த்து, பாலின சமத்துவம் காணும் உயர்ந்த நோக்கத்துடன் மார்ச் 8 உலக பெண்கள் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 1910 ஆம் ஆண்டில் நடைபெற்ற சோசலிஸ்டு பெண்களின் சர்வதேச மாநாட்டின் அறைகூவல் படிபடியாக பல நாடுகளாலும் ஏற்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மன்றம் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது. இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சர்வதேச பெண்கள் தினத்தில் அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

எட்டும் அறிவினில் ஆணுக்கு பெண் இளைப்பில்லை காண் என்று கும்பியடி" என்று கற்பித்து சென்றார் புரட்சிக் கவி பாரதி

நாடு ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பு சட்டம் பாலின வேறுபாடுகளின்றி குடிமக்கள் அனைவருக்கும் சம உரிமை வழங்குகிறது.

ஆனால், நாட்டின் நிகழ்கால சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் ஆணாதிக்கம் மேலோங்கி நிற்கிறது. அரசியல் அதிகாரத்தில் அமர்ந்துள்ள பழமைவாத சக்திகள் பெண்களின் உரிமைகளை மறுத்து, அவர்கள் ஆணாதிக்க அடிமைகளாக வாழ்ந்து வரவேண்டும் என பகிரங்கமாக பேசியும், நிர்பந்தித்தும் வருகின்றன.

பாலின பாகுபாடுகள், பாலியல் வன்முறைகள், இழிவுபடுத்தும் அநாகரிகச் செயல்களுக்கு எதிராக கம்யூனிஸ்டுகளும், ஜனநாயகவாதிகளும் உழைக்கும் பெண்களுடன் இணைந்து போராடி வருகின்றனர்.

தொடர்ந்து நடந்த போராட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீத இட ஒதுக்கீடு பெற்றிருந்தாலும், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களிலும் 33 சதவீத ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை.

பெண்களின் மீதான வன்முறைகளும் பணியிடங்களில் நடைபெறும் பாலியல் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. நிர்பயா நினைவாக நிறைவேற்றப்பட்ட பணியிட பாலியல் வன்முறை தடுப்பு சட்டம் அமலாக்கப்படுவதில்லை என்ற நிலையில் நடப்பாண்டு பெண்கள் தினத்தில், பாலின வேறுபாடுகளையும், அடக்குமுறைகளையும் ஆதரித்து வரும் வகுப்புவாத சக்திகளின் கரங்களில் சிக்கியுள்ள நாட்டின் அதிகாரத்தை மீட்கும் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து, முன்னேறுவோம் என உறுதி ஏற்று, மீண்டும் பெண்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சி தொகுதி குழு சார்பாக சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து காஞ்சி பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் தொகுதி செயலாளர் ஜே.கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

ஏ.மூர்த்தி, எஸ்.வி.சங்கர், த.சுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் பா.கார்த்திக், மாவட்ட துணைச் செயலாளர் பி.வி.சீனிவாசன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

தொகுதிக்குழு உறுப்பினர்கள் பி.ஸ்டாலின், கே.ராஜகோபால், ஜெ.பி.ராஜேந்திரன், எஸ்.ஜெயக்குமார் உள்ளிட்ட 50 மேற்பட்ட தோழர்கள் கலந்து கலந்து கொண்டனர்.

## கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் மகளிர் தின விழா

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை சார்பில் உலக மகளிர் தின விழா பேராசிரியர் கமலா தலைமையில் நடைபெற்றது. மாதர் சங்க வட்ட செயலாளர் மணிமேகலை முன்னிலை வகித்தார். அனைத்திந்திய தமிழ் சங்க தென் மண்டல தலைவர் முனைவர் செல்வ.முருகசரஸ்வதி "மாதவிடாய் விடுமுறை அவசியம்" என்ற தலைப்பில் பேசினார். ஜெயாஜனாரத்தனன், ஆசிரியை மகாலட்சுமி, பேராசிரியை வே.தீனதயாளி ஆகியோர் பெண் விடுதலை குறித்துப் பேசினர். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஐப்சோ மாவட்ட தலைவர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். மாதர் சங்க மாவட்ட தலைவர் மாரீஸ்வரி, தகஇபெ மாவட்ட தலைவர் நீலநிலா செண்பகராஜன் ,கவிஞர் யுவபாரதி, உள்பட பலர் கலந்து கொண்டார்கள். முன்னதாக கவிஞர்கள் சுவாமிநாதன், கணேசன் பாடல்கள் பாடினார்கள். நிவேதிதாபாரதி நன்றி கூறினார்

## மசாஜ் தொழிலாளர்கள் சங்க 7ம் ஆண்டு பேரவைக் கூட்டம்

ஏஐடியுசி மசாஜ் தொழிலாளர்கள் சங்கத்தின் 7ம் ஆண்டு பேரவை கூட்டம் ஒகேனக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏஐடியுசி மசாஜ் தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் ம.மாதேஷ் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில சிறப்பு தலைவரும்,முன்னாள் சட்ட பேரவை உறுப்பினருமான. ந.நஞ்சப்பன்,சங்க கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் கலந்து கொண்டு சங்க பெயர் பலகையை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தர்மபுரி மாவட்ட செயலாளர் எஸ் கலைசெல்வம், மாவட்ட துணை செயலாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் சி மாதையன், ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் கே.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினர்.

கூட்டத்தில் மசாஜ் தொழிலாளர்களை சுகாதார தொழிலாளர்களாக மாநில அரசு அங்கீகரிக்க வேண்டும்,மசாஜ் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி வரை உதவித் தொகையுடன் கூடிய இலவச கல்வி வழங்க வேண்டும்,

மசாஜ் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை புதுப்பித்து வழங்க வேண்டும்,மசாஜ் தொழிலாளர்கள் அனைவருக்கும் இலவச வீட்டு மனை பட்டா வழங்கி தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# எங்கே எனது வேலை தொடர் பயணத்தை தொடருவோம்!



பா.தினேஷ்

**தோழர்களே, வணக்கம். அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கடந்த காலங்களில் இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்து தமிழகம் மட்டுமல்ல இந்தியா முழுவதும் பல சாதனைகளை செய்துள்ளது.**

**தற்போது எங்கே எனது வேலை? என்ற முழக்கத்துடன் கடந்த 3 ஆண்டுகளாக வேலையின்மைக்கு எதிராகவும், புதிய வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என தொடர் இயக்கங்களை நடத்தி வருகிறோம்.**



ஆனால் ஆண்டுக்கு ஆண்டு வேலைவாய்ப்பு கேட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்கிற எண்ணிக்கை பெருகுகிறதே தவிர வேலைவாய்ப்பு என்பது வழங்கப்படுவது இல்லை.

இந்திய ஒன்றியத்தை ஆளும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டிற்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்ற முழக்கத்துடன் தேர்தலை சந்தித்தனர். வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த உடன் ஆண்டுக்கு இலட்சக்கணக்கான இளைஞர்களை வேலை இழப்பிற்கு வழிவகை செய்து கொண்டு இருக்கின்றனர்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனது படிப்பை முடித்து விட்டு பதிவு செய்தால் தனது படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்கும் என்ற மிகுந்த நம்பிக்கையுடன் தமிழ்நாடு முழுவதும் 67 லட்சத்து 58 ஆயிரத்து 698 இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்துக்கிடக்கின்றன.

ஆனால் இவற்றை பற்றி சிறிதும் கண்டுகொள்ளாமல் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் அவர்களின் வேலையின்மையை ஒழித்து வாழ்க்கைக்கான உத்திரவாத பணிகளை வழங்காமல் இந்திய நாட்டின் இளைஞர்களை அவமானப்படுத்துகிறார். ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இளைஞர்களிடம் நான் டீ விற்பனை செய்தேன், நாட்டின் பிரதமராக உயர்ந்து விட்டேன். நீங்கள் அனைவரும் பக்கோடா விற்பனை செய்யுங்கள் என்று இளைஞர்களை கேவலப்படுத்தி கொண்டு இருக்கிறார்.

ஆனால் வேலையின்றி தங்களின் படிப்பிற்காக வாங்கிய கடனை கட்ட முடியாமலும், தனது மகன் படிப்பு முடித்து வேலை கிடைத்தால், நாம் இத்தனை ஆண்டு காலமாக கஷ்டப்பட்டதற்கு, தனது குடும்பத்தின் வாழ்க்கை நிலை மாறி விடும், வறுமை என்பது இல்லாத ஒரு வாழ்க்கை கிடைத்து விடும் என்று கனவுகளை சுமந்து கொண்டு இருக்கும் பெற்றோர்களுக்கும் தனது மகன் படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை என்பது பேரிடியாக உள்ளது.

இந்திய நாட்டின் இளைஞர்கள் தங்களது குடும்பங்களின் வறுமையை புரிந்து கொண்டு வேலைக்கு சென்று விட்டால் தனது தாய், தந்தையை மகிழ்ச்சியுடன் வாழ வைக்கலாம் என்று கண்ட கனவுகளை குழி தோண்டி புதைத்து விட்டு குடும்ப வறுமைக்காக தனக்கு விருப்பம் இல்லாத பணிகளுக்கு ரூ.4000 முதல் ரூ.8000 சம்பளத்துக்கு தனியார் வேலைகளுக்கு சென்று 14 முதல் 16 மணி நேரம் கடுமையாக உழைத்து வருகின்றனர்.

ஆனால் இவற்றை பற்றி சிறிதும் சிந்திக்காமல் நாட்டின் சிறந்த பிரதமர், உறுதிமிக்க மனிதர், 56 இஞ்ச் அகலம் கொண்ட மார்புகளை உடையவர் என நாட்டின் சிறந்த நடிகராக வலம் வந்து கொண்டு இருக்கிறார். அனைத்து வகையான பொதுத்துறை நிறுவனங்களையும் தனியார் முதலாளிகளுக்கு பா.ஜ.க. கட்சியின் தேர்தல் செலவுகளுக்காக கோடான கோடி ரூபாய் பணத்தை வழங்கிய முதலாளிகளுக்கு கைமாறு செய்கின்ற வகையில், செய் உதவிக்கு நன்றி மறவாமல் நாட்டின் உயரிய வளமான பொதுத்துறை நிறுவனங்களை விற்பனை செய்து வருகிறார் பிரதமர் நரேந்திர மோடி. இவற்றை மாற்றிட வேண்டும். இந்திய நாடு என்பது இலட்சகணக்கான இளைஞர்களும் தொழிலாளர்கள் என பலரும் போராடி உயிர் தியாகம் செய்து பெற்ற விடுதலையினால் உருவாக்கப்பட்டது. இந்திய நாட்டின் பொதுத்துறை நிறுவனம் என்பது நாட்டின் உழைக்கும் மக்களுக்கு சொந்தமானது. ஆனால் அவற்றை பற்றி சிறிதும் நினைக்காமல் நாடாளுமன்றத்தில் அவர்களுக்கு எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்பதற்காகவே மோடியும், அமித்ஷாவும் இந்திய நாட்டை விற்பனை செய்கிறார்கள்.

எனவே இந்திய ஒன்றியம் பாதுகாக்கப்பட வேண்டும். இந்திய ஒன்றியத்தின் இளைஞர்கள் நிலை மாற்றப்பட வேண்டும். அவர்களின் படிப்புகேற்ற வேலை வழங்கிட வேண்டும் இந்திய நாட்டின் விடுதலைக்காக தனது 13 வயதில் போராட்ட களத்திற்கு வந்து நாட்டின் இளைஞர்களை திரட்டி வீரமிக்க தன்மையுடன் போராடி பிரிட்டிஷ் அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி 23 வயதில் நாட்டின் விடுதலைக்காக தூக்கு கயிற்றை முத்தமிட்ட மாவீரன் பகத்சிங் அவர்களின் பெயரால் பகத்சிங் தேசிய வேலை உறுதியளிப்பு சட்டம் (ஙிழிணிநிகி) இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றிட வேண்டும்.

இந்தசட்டம்இந்தியஒன்றியத்தில்படிப்பை முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யும் அனைவருக்கும் வேலை அல்லது வேலையில்லா கால நிவாரணம் என்ற முழக்கத்தை உறுதி செய்ய பகத்சிங் நினைவு நாளில் தமிழகத்தின் ஒசூர், சென்னை, கன்னியாகுமரி, வேதாரண்யம் ஆகிய நான்கு முனைகளிலிருந்து மக்களை சந்திக்கும் தொடர் பரப்புரை பயணம் நடைபெற உள்ளது. இந்த பயணத்திற்கு தமிழ்நாடு முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், மாதர் என அனைத்து பகுதி மக்களும் பெரும் ஆதரவுகளை தர வேண்டும்.

10 நாட்கள் நடைபெறும் தொடர் பரப்புரை பயணத்தின் இறுதியில் தமிழகத்தின் ஆகச்சிறந்த தலைவர் தனது மாணவர் பருவம் முதல் உழைக்கும் வர்க்க விடுதலைக்காக போராடிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தியாக செம்மல் பாலதண்டாயுதம் அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 2ந் தேதி திருச்சியில் இளைஞர்களின் எழுச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இரண்டு இளம் போராளிகளின் தியாகத்தை போற்றும் வகையில் அவர்கள் மீது உறுதியேற்று நடைபெறும் இயக்கத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்களை பங்கேற்க நாம் பணியாற்றுவோம் என உறுதியேற்போம்.

இன்குலாப் ஜிந்தாபாத்

AIYF ஜிந்தாபாத் இளைஞர் முழக்கம் வெல்லட்டும்

**தொடர்புக்கு: 9080835399**

# தமிழரின் பெருமையை மீட்ட ஒற்றைப்பெண் யார் இந்த கனிமொழி மதி? கீழடி வரலாற்றை காத்தது எப்படி?

**கீழடியில் வரலாற்று அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இங்கே ஆய்வு நடத்த முக்கிய காரணமாக அமைந்த வழக்கறிஞர் கனிமொழி மதி தற்போது இணையம் முழுக்க கவனம் பெற்றுள்ளார்.**

மதுரை மாவட்டத்திற்கு தென்கிழக்கில் 15 கிலோ மீட்டர் தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் இருக்கிறது கீழடி கிராமம். இங்கு செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் கிமு 6ம் நூற்றாண்டு பழமை வாய்ந்த பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு 2014ல் மத்திய தொல்லியல் ஆராய்ச்சித்துறை மூலம் பணிகள் தொடங்கப்பட்டன.

அப்போது பெங்களூரில் தொல்லியல் துறை கண்காணிப்பாளராக இருந்தவர் அமர்நாத் ராமகிருஷ்ணன். இவரின் திட்டத்தின் காரணமாகவே கீழடியில் ஆய்வுகள் செய்யப்பட்டது.

அருங்காட்சியகம் கி.மு. 6ம் நூற்றாண்டு முதல் கி.பி. 1ம் நூற்றாண்டு வரையிலான வரலாற்று ஆதாரங்கள் கீழடியில் கிடைத்து உள்ளன. இந்த கீழடி கண்டுபிடிப்புகளை வைத்து அந்த பகுதியில் அருங்காட்சியகம் தொடங்கப்பட்டு உள்ளது.



பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இந்த திட்டம் முதல்வர் ஸ்டாலின் மூலம் தொடங்கப்பட்டு தற்போது கட்டுமானம் நிறைவடைந்து திறக்கப்பட்டு உள்ளது. தமிழர் பாரம்பரியத்தில் அருங்காட்சியகம் கட்டப்பட்டு உள்ளது. இங்கே கீழடியில் அருங்காட்சியகம் அமைக்க முக்கிய காரணம் அங்கு செய்யப்பட்ட 4ம் கட்ட அகழாய்வுதான்.

இந்த 4ம் கட்ட அகழாய்வு நடக்க முக்கிய காரணமாக இருந்தவர்கள் வழக்கறிஞர் கனிமொழி மதி. இவர் நடத்திய இடையராத சட்ட போராட்டம்தான் கீழடியில் அகழாய்வு நடக்க காரணமாக அமைந்தது. வழக்கறிஞரான இவர் கீழடி தொடர்பாக சட்ட போராட்டம் நடத்தினார். இங்கே உடனே 4ம் கட்ட அகழாய்வை தொடங்க வேண்டும். இங்கே மீண்டும் கண்காணிப்பாளராக அமர்நாத் ராமகிருஷ்ணாவை நியமிக்க வேண்டும். இங்கே கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை வைத்து அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்று முக்கிய கோரிக்கைகளை வைத்தார். இந்த வழக்கில்தான் 4ம் கட்ட அகழாய்வை நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதோடு தமிழ்நாடு அரசும் இங்கே இணைந்து செயல்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன் விளைவாகவே இங்கே அகழாய்வு நடந்தது.

இந்த நிலையில் கனிமொழி மதியின் சட்ட போராட்டத்தை நினைவு கூர்ந்து திமுக அயலக நலப்பிரிவு செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி போஸ்ட் செய்துள்ளார்.

அதில், கீழடி தொடர்பாக நீதியரசர் மகாதேவன் அவர்களின் தீர்ப்பு முக்கியமானது. கீழடியை கண்டறிந்த ஆய்வாளர் அமர்நாத்ராமகிருஷ்ணா மீண்டும் கீழடிக்கு கொண்டுவரப்படுவதோடு கீழடியை நீதிமன்றம் தொடர்ந்து கண்காணிக்கும் என்பதையும் சுட்டியுள்ளார்.

கீழடிக் கண்டறிதல்களின் முக்கியத்துவத்தை கமுக்கமாக மூழ்கடிக்க முயலும் மத்திய அரசு மீதான தன் விசனத்தையும் நீதியரசர் மகாதேவன் நேர்மையாக வெளிப்படுத்தியுள்ளார். ஒருநாள் கீழடி தமிழரின் பெருமையை உலகப் பரப்பில் நிறுத்தும் எனவும் பகர்ந்துள்ளார் நீதியரசர்.

கீழடியானது பண்டைத் தமிழரின் நாகரீகச் செழுமையை, உலகோடான வணிகச் சிறப்பை நிரூபித்து நிறுவும் பெருங்களம். இதனை மறைத்து அழிக்க முயல்கிறது மத்திய அரசு. நீதியமைப்பின் ஐயா மகாதேவன் போன்றவர்கள் உண்மையான நீதிக் காவலர்களாய் நின்று உண்மை காக்கிறார்கள்.

ஆனால் தனியொருத்தியாக இந்த வழக்கினை நீதியவைக்கு எடுத்துச்சென்று, கடந்த மூன்றாண்டுகளாய் மதுரை, சென்னை என சலிப்பின்றி தன் சொந்தச் செலவில் அலைந்து இன்று இத் தீர்ப்பு கிடைத்திட மூல காரணமான நம் எழுமின் குழுவின் வேலுநாச்சியார் சிஜிகிசிமிஷி தமிழர் தொழில் வணிக வேளாண் பெருமன்றத்தை நிறுவிய உறுப்பினர்களில் ஒருவர், தமிழக பெண்கள் இயக்கத்தின் நிறுவனர் வழக்கறிஞர் கனிமொழி மதி ஆவார். இவர் நிச்சயமாக ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினதும் பாராட்டுக்கும் வரலாற்று நன்றி நினைவுக்கும் உரியவர். வாழ்த்துகிறோம் வழக்கறிஞரே !, என்று குறிப்பிட்டுள்ளார்.

# குமரி மாவட்டம் ஒரு கலாச்சார மண்

## தோள் சீலை போராட்ட 200ம் ஆண்டு நிறைவு விழாவில் மு.வீரபாண்டியன் பேச்சு



கன்னியாகுமரி மாவட்டத்தில் தோள் சீலை போராட்டம் 200ம் ஆண்டு நிறைவு விழாவை திமுக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விசிக, மதிமுக ஆகியவை இணைந்து ஒருங்கிணைந்து நடத்தியது.

இந்த நிகழ்வில் தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின், கேரள முதல்வர் பினராய் விஜயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவனத் தலைவர் தொல் திருமாவளவன், காங்கிரஸ் சார்பில் பீட்டர் அல்போன்ஸ், பாலபிரஜாதிபதி அடிகளார் ஆகியோர் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

மு.வீரபாண்டியன் பேசும்போது, குமரி மாவட்டம் ஒரு கலாச்சாரமண். இங்கே தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முகமும், முகவரியுமாக திகழ்ந்த ஜீவா பிறந்தார். நகைச்சுவை கருத்துகளில் பகுத்தறிவினை இணைத்து மக்களுக்கு சிந்தனையை தூண்டிய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் இந்த மண்ணிலே தான் பிறந்தார். இந்த மண்ணில் தோன்றியவர்கள்தான் மக்களுக்காக போராடிய குஞ்சன்நாடார், மார்ஷல் நேசமணி, சிதம்பரநாதன் ஆகியோர். சதாவதானி செய்குத்தம்பி பாவலர் இந்த மண்ணில் தோன்றி பெருமை ஏற்படுத்தியவர். தமிழின் பேச்சு வழக்கில் மலையாள ஓசையும், மலையாள மொழியில் தமிழின் ஓசையும் கலந்து பேசப்படுகிற ஒரு மொழி இம் மாவட்டத்தில் மக்களால் பேசப்படுகிறது. இது இரண்டு மொழிகள் ஒன்றை ஒன்று மதிப்பதற்கான அடையாளமாக கருதலாம். தமிழோடு பயணப்பட்ட கிரேக்கம் போன்ற பலமொழிகள் இன்று கால வெள்ளத்தில் இருந்த சுவடுகள் இல்லாமல் காணாமல் போனது. ஆனால் தமிழ் இன்றும் வாழ்வதற்கு அடிப்படை காரணமாக இருப்பது பிற மொழிகளை மதிப்பது அதனுடைய தன்மை. இது இந்திய கலாச்சார சூழலில் மிக மிக முக்கியமானது.

இந்தத் தோள்சீலை போராட்டம் என்பது சாதாரண போராட்டம் அல்ல. இது சுயமரியாதைக்கான போராட்டம், இது பெண்களின் உரிமைக்கான போராட்டம். இதில் அவமானத்திற்கு இடமில்லை. யார் ஒடுக்கிறார்களோ அவர்கள் தான் அவமானத்திற்கு உரியவர்கள். ஒடுக்கு முறைக்கு உள்ளான மக்கள் அவமானத்திற்கு உரியவர்கள் அல்லர். இவர்கள் வரலாற்றைப் படைத்தவர்கள். பெண்ணின், தாயின் மார்பகம் கவர்ச்சி, காட்சி பொருள் அல்ல. மாபெரும் படைப்பாக்கத்திற்குரியது. உலக மாமேதை ஷெல்லி தனது கவிதைகளில் கூறுவது போல் குழந்தையின் பத்து விரல்களும் தாயின் மார்பகங்களை தேடும் போது அதை படைப்பாக்கத்தின் துவக்கமாக கருத வேண்டும் என்று கூறினார்.

இந்த மகத்தான போராட்டத்தில் தனி மனிதர்களின் பங்கு அளவிட முடியாதது. தனி மனிதனான ஷெல்லி மனித உரிமை பிரகடனத்தை உலகுக்கு அளித்தார். அது இன்று வரை ஐநாவில் பின்பற்றப்பட்டு வருகிறது. டார்வின் என்ற தனிமனிதர் அறிவியலின் திசை போக்கையே மாற்றியவர். மார்க்ஸ், ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை உலகை புரட்டிப் போட்டது. தனி ஒரு மனிதரான பெரியார் உலகில் இல்லாத சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். அரசியல் நிர்ணய சபையில் பல்வேறு ஆளுமை பெற்ற நபர்கள் இருந்தாலும் அம்பேத்கர் உறுதியாக இருந்து மதசார்பின்மையை உருவாக்கச் செய்தார். சுவாமி வைகுண்டர், நாராயண குரு, போன்றவர்கள் தனி மனிதர்கள் என்றாலும் அவர்களுடைய சமூக சீர்திருத்தத்தை யாரும் எளிதில் கடந்து சென்று விட முடியாது.

இதே காலத்தில் தான் கருப்பின மக்களை வெள்ளை முதலாளிகள் கொடுமைப்படுத்தினார்கள். ஒடுக்கு முறையில் இருந்து கருப்பின மக்களை காப்பாற்றுவதற்காக பிரடரிக் டக்ளஸ் (அபாலீஷேசன்) அழித்தொழிப்பு இயக்கத்தை தொடங்கினார். இதை பயங்கரவாத இயக்கமென மேற்குலகம் சித்தரித்தது. அவர் கூறும் போது பெண்களை நிர்வாணமாக கட்டிப் போடக்கூடாது. பெண்களுக்கு வழங்கக்கூடிய சாட்டையடிகளை குறைத்துக் கொள்ள வேண்டும். ரத்தத் துளிகளை துடைக்க அவர்களுக்கு பஞ்சும் மருந்தும் வழங்க வேண்டும் என்பதுதான் அவருடைய கோரிக்கையாக இருந்தது. இந்த உரிமைப் போர்களின் முன் ஏர்தான் தோள் சீலை போராட்டம்.

இந்திய விடுதலை போருக்கான காரணியாகத்தான் நாம் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போது மார்க்சை விமர்சனம் செய்கிறேன் என்று சொல்லி தமிழகத்தினுடைய ஆளுநர் ரவி மார்க்சியம் இந்தியாவை சிதைத்தது என்று சொல்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாமனிதர் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய நம்முடைய தமிழக முதல்வர் தெளிவாகச் சொன்னார்கள். தோழர் என்கின்ற ஒற்றை சொல் உலகம் முழுவதும் இருக்கக்கூடிய மனிதர்களை ஒன்றுபடுத்துகிறது என்பதோடு மட்டுமல்லாமல் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்பதைவிட ஒரு ஒற்றுமை முழக்கம் வேறு எந்த இயக்கத்தில் இருக்க முடியும் என்று ஒரு அறைகூவலை நம்முடைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்றைக்கு அந்த நிகழ்ச்சியிலே கேட்டார்.

போராட்டம் என்பது கடந்த காலத்தில் நடந்தாலும் நிகழ்காலத்தினுடைய தலைமுறைக்கு அதை கடத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே காலத்தின் தேவை கருதி இன்றைக்கு பல்வேறுபட்ட கட்சிகளால் ஒருங்கிணைக்கப்பட்டு இரண்டு மாநில முதல்வர்கள் கலந்து கொள்கிற இந்த நிகழ்ச்சி மகத்தான நிகழ்ச்சி. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்த ஒருங்கிணைப்பு குழுவிற்கு நன்றி சொல்லி இந்த தோள் சீலைப் போராட்டத்தில் தங்களுடைய உரிமை முழக்கத்தை தங்களுடைய போராட்டம் முழக்கத்தை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்திய அந்தத் தோழிகளுக்கும், தோழர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செம்மாந்த வீரவணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து நன்றியோடு விடைபெறுகிறேன். நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் கலந்து கொண்டார்.

# வெளிமாநில தொழிலாளர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வலியுறுத்தல்

தொழில் நகரமான கோவை உள்ளிட்டு நமது மாநிலத்தில் பணிபுரிந்து வருகின்ற வட மாநில தொழிலாளிகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கூறி பீகார் சட்டமன்றத்திலும், சட்டமன்ற உறுப்பினர்களின் வலைதள பதிவுகளிலும் தவறான செய்திகள் தொடர்ந்து வருகின்றன.

வட மாநிலத்தில் உள்ள தொழிலாளிகளின் பெற்றோர்கள் தொடர்ந்து இங்கு பணிபுரிந்து வருபவர்களுக்கு நெருக்கடி கொடுத்து அவர்களை திரும்பி ஊருக்கு வரச்சொல்கின்றனர். இங்கே பணிபுரிந்து வருகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பெரும்பாலான தொழில் நிறுவனங்களில் பணிபுரியாமல் தங்கள் ஊருக்கு செல்ல வேண்டும் என்று ஒவ்வொரு தொழில் முனைவோரிடமும் வலியுறுத்தி நெருக்கடி கொடுத்து வருகின்றார்கள். தொடர்ந்து நூற்றுக்கணக்கான தொழிலாளிகளும் சென்று கொண்டிருக்கின்றார்கள். இந்த பிரச்சனை சம்பந்தமாக முதலமைச்சர் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வந்த போதிலும் தொழிலாளிகள் கேட்கும் நிலை இல்லாத சூழல் தொடர்ந்து வருகின்றது. பல நெருக்கடிகளை சந்தித்து வரும் தொழில் முனைவோர்களுக்கு அச்சத்தையும் ஏற்படுத்தி தொழில் முடக்கத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

தமிழக அரசு பீகார் மாநில அரசுடன் பேசி இங்கே பணிபுரிகின்ற வடமாநில தொழிலாளிகளின் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தை போக்கும் வகையில் பீகார் அரசு அந்த மாநிலத்தில் அறிவிப்புகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

அதுபோல கோவை உள்ளிட்ட தமிழகத்தில் ஹிந்தி மொழியில் தொழிலாளிக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் பதிவுகள் செய்து அதை காவல்துறை மூலமாகவும் அரசு துறை மற்றும் ஊடகங்கள் மூலமாகவும் உடனடியாக ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களை பணிவுடன் எங்கள் தொழில் கூட்டமைப்புகளின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# கோவை ஒப்பந்தத் தொழிலாளர் மாநாடு

## வட மாநிலத் தொழிலாளர்களும் பங்கேற்ற

கோவை மாவட்ட பொறியியல் பொதுத் தொழிலாளர் சங்க முன் முயற்சியில், 5.3.2023ல் ஒப்பந்த தொழிலாளர் பாதுகாப்பு மாநாடு கோவை தியாகிகள் நிலையத்தில் நடத்தப்பட்டது.

பல நிறுவனங்களில் இருந்தும் வட மாநில தொழிலாளர் உள்ளிட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.

மாநாட்டுக்கு வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையேற்றார். தேசிய செயலாளர் டி எம் மூர்த்தி, மாநில செயலாளர் எம் ஆறுமுகம் முன்னாள் எம்எல்ஏ, பொறியியல் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் கே எம் செல்வராஜ், ஏஐடியுசி கோவை மாவட்ட பொதுச் செயலாளர் சி.தங்கவேல் ஆகியோர் பேசினார். மாநாட்டு நிகழ்வுகளை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் எம்.வி. ராஜன் இந்தியில் மொழிபெயர்த்தார்.

மாநாடு பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

1) தொழிற் தகராறுகள் சட்டத்தின்படி 240 நாட்கள் பணி முடிக்கக்கூடிய அனைத்து தொழிலாளர்களும், அவர்கள் தற்காலிகம் அல்லது ஒப்பந்த தொழிலாளர் என்று எந்த வகைப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தாலும்




அந்தந்த தொழிற்சாலைகளில் அவர்கள் நிரந்தர செய்யப்பட வேண்டும்.

2) ஒப்பந்த தொழிலாளர் (பணி வரைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழிப்பு) சட்டத்தின் அடிப்படையில் நிரந்தர வேலைகளில் ஒப்பந்த முறையினை அரசு அனுமதிக்க கூடாது.

3) 1979 ஆம் வருடத்திய புலம்பெயர் தொழிலாளர் பாதுகாப்பு சட்டத்தின்படி பல்வேறு மாநிலங்களில் இருந்து புலம்பெயர்ந்து தமிழகத்தில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் சட்டப்படி வழங்கப்பட வேண்டும். அதேபோல் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிராகப் பொய்யான செய்திகளை பரப்பக் கூடியவர்கள் மீது தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

4) தமிழகத்தில் எந்த தொழில் செய்யக்கூடிய தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 21,000ற்கும் குறையாமல் சமாபளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

இதன் மீது தொடர் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

மொத்த தொழிலாளர்களில் அதிகப்படியான எண்ணிக்கையில் இருக்கக்கூடிய புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஒப்பந்த தொழிலாளர்களை அணி திரட்டுவதன் மூலம் மட்டுமே நிரந்தர தொழிலாளர்கள் உள்ளிட்டு அனைத்து பகுதி தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்க முடியும்.

ஒப்பந்தத் தொழிலாளர், ஸ்டாப் ஒர்க்கர் என்பதெல்லாம் தொழிலாளர்களை ஒன்று சேராமல் பிரிக்கவும், அதன் மூலம் தொழிற்சங்க அமைப்புகளை பலவீனப்படுத்தவும், தங்களுடைய சுரண்டல் நடவடிக்கைகளைத் தீவிர படுத்தவும் முதலாளிகள் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளாகும்.

தமிழர் தமிழர் அல்லாதவர் என்று இன வெறியையும், இந்து, இந்து அல்லாதார் என்று மதவெறியையும் தூண்டி, தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள்; வட மாநில தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று பொய் செய்திகளை பரப்பி தொழிலையும் சமூக அமைதியையும் சீர்குலைத்து அரசியல் சுய லாபம் தேடுபவர்கள் குறித்து விழிப்புணர்வை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட விஷயங்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

# திருவண்ணாமலையில் பற்றி எரியும் சாதி தீ! அரசு உடனடியாக தடுக்க வேண்டும்!



கீ.சு.குமார்

**அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தில் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. வலைதள வளர்ச்சியால் உலகம் ஒற்றைக் குடையின் கீழ் உள்ளங்கைகளில் அடங்கிக் கிடக்கிறது.**

**ஆனாலும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட சாதிய கட்டமைப்பும், தீண்டாமை கொடுமையும் இன்றைய கார்ப்பரேட் மற்றும் இந்துத்துவா தாக்கத்தால் புதிய உயிர்ப்போடு தலைவிரித்து ஆடுகிறது.**





ஆம்! திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு ஒன்றியம், தென்முடியனூர் கிராமத்தில் தீண்டாமை கொடுமைக்கும், சமூகப் புறக்கணிப்புக்கும் உள்ளாகி 2500 குடும்பங்கள் வசிக்கும் ஒரு தலித் கிராமமே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அக்கிராம இளைஞர்கள் கொடுத்த தகவலை அடுத்து தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் தென் முடியனூர் விரைந்தோம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் தங்கராசு, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் ரஹமதுல்லா ஆகியோரை நேரில் தொடர்பு கொண்டு தகவல்களை திரட்டினோம்.

நம்மோடு தோழர்கள் ராஜசேகர், ராதாகிருஷ்ணன், ராஜீவ்காந்தி ஆகியோர் உடன் வந்தனர்.

களத்தில் நாங்கள் கண்ட காட்சிகள் எங்களை அதிர்ச்சி அடையச் செய்தது.

காலனி பகுதியில் ஆதிக்க சாதியினர் நடத்தி வந்த மளிகை கடை, எழுதுபொருள் கடை, டீ கடை, பால் கடை, காய்கறி கடை, முடி திருத்தகம் ஆகிய அனைத்தும் மூடப்பட்டு தலித் மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கும், சேவைகளும் தடை செய்யப்பட்டிருந்தது.

பால் கொள்முதல் மையம் மூடப்பட்டதால், தலித் மக்கள் தாங்கள் கறந்த பாலை வயல் வெளியில் ஊற்றினார்கள். ஓட்டல், சிற்றுண்டிகளில் உணவு வழங்கப்படவில்லை. தலித் மக்கள் பயிர் செய்து வந்த விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் வாய்க்கால் துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் வயலில் பயிர்கள் வாடிக்கொண்டிருந்தன.

கரும்பு வெட்டவும், இதர கூலி வேலை செய்யவும் இவர்கள் அழைக்கப்படவில்லை. காலனி மக்களின் பறை இசைக்குழுவை ஊர் பகுதியில் யாரும் அழைக்கக் கூடாது என தடைவிதிக்கப்பட்டுள்ளது.

வேலை கிடைக்காததால் ஆண்களும், பெண்களும் வீதியோரம் பதற்றத்தோடு அமர்ந்திருந்தனர். அந்த கிராமத்தை 250 போலீசார் சுற்றி வளைத்து கண்காணித்து வந்தனர்.

### ஏன் இந்த நிலை?

இவற்றையெல்லாம் நாம் களத்தில் கண்டபோது நாம் எந்த நூற்றாண்டில் வசிக்கிறோம்? என்ற கேள்வி நமக்கு எழுந்தது.

தலைநகர் சென்னையிலிருந்து சுமார் 170 கி.மீ. தொலைவில்தான் உள்ளது திருவண்ணாமலை மாவட்டம். அனைவருக்கும் அருள் பாவிக்கும் அண்ணாமலையார் கோவிலும், கிரிவலப் பாதையும், ஆண்டுக்கொரு முறை நடைபெறும் தீபத் திருவிழாவும் உலகப் புகழ்பெற்றவை.

அங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது பழம்பெருங்கிராம் தென் முடியனூர். இந்தியாவில் இருண்ட ஆதிக்க வடிவமான ஊர் – சேரி முறை இன்றும் உயிர்ப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஊர்ப்பகுதியில் ஐந்தாயிரம் குடும்பங்களும், சேரிப்பகுதியில் 2500 குடும்பங்களும் வசிக்கின்றனர். ஊருக்கும் – சேரிக்கும் இடைப்பட்ட மையப்பகுதியில் உள்ள காலி நிலத்தில் 80 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அழகுமுத்து மாரியம்மன் கோவிலும், அதே காலத்தில் கட்டப்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கூடமும் அமைந்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த உயர்நிலைப் பள்ளியை இடித்து விட்டு அந்த இடத்தில் வர்த்தகக் கட்டிடம் கட்டுவது, பள்ளிக் கூடத்தை ஊர்ப்பகுதியில் (உயர்சாதியினர் வசிக்கும் பகுதியில்) கட்டுவது என முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊருக்குள் பள்ளிக்கூடம் அமைந்தால் பட்டியலின ஆண், பெண் மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. எனவே, இயங்கி வரும் இடத்திலேயே தொடர்ந்து பள்ளி இயங்க வேண்டும் என தலித் மக்களால் போராட்டம் நடத்தப்பட்டு இறுதியில் பள்ளிக்கூடம் இடிப்பது கைவிடப்பட்டது.

நாங்கள் சென்றபோது சாதிகளை அறியாத, சின்னஞ்சிறு குழந்தைகள், பள்ளி மாணவர்கள் ஒற்றுமையோடு துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

பள்ளி இடப் பெயர்வை தடுப்பதற்காக டாக்டர் அம்பேத்கர் சமூக எழுச்சிப்படை என்ற அமைப்பை தொடங்கினர்.

**பள்ளிக்கு அருகில் உள்ள அழகுமுத்து மாரியம்மன் கோவில் கட்டப்பட்ட நாள் முதல் ஆதிக்க சாதியினருக்கு மட்டுமே இங்கு வழிவாட்டு உரிமை. பட்டியலின மக்களுக்கு வழிபாட்டு உரிமை இல்லை. இக்கோவில் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது கூடுதல் செய்தி.**

இக்கோவிலுக்குள் சென்று வழிவட உரிமை கேட்டு கடந்த 30 ஆண்டுகளாக தலித்மக்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் தொடர்ச்சியாக அம்பேத்கர் மக்கள் எழுச்சிப் படை யினர் கடந்த ஜனவரி மாதம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். அடுத்து இந்து அறநிலையத்துறை உத்தரவின் பேரில் மாவட்ட ஆட்சியர் முருகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், கோட்ட வருவாய் அலுவலர் மந்தாகினி ஆகியோர் முன்னிலையில் ஆயுதம் தாங்கிய காவல்துறை பாதுகாப்புடன் கடந்த ஜனவரி மாதம் 30ஆம் தேதி ஆலயத்திற்குள் சென்று தலித் மக்கள் வழிபாடு நடத்தி பொங்கல் வைத்து கொண்டாடினர்.

சாதி தீ விசிறி விடுப்படுவதற்கு இதுவே காரணம்!

இவர்களின் ஆலய நுழைவால் அம்மன் தீட்டுப்பட்டு விடுவாள், ஊர் கட்டுக்கோப்பு உடையும், அமைதி சீர்குலையும் என ஆதிக்க சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்து கோவிலுக்கு அருகிலேயே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தொலைக்காட்சிகளும், அச்சு, மின்னணு ஊடகங்களும் 80 ஆண்டுகளுக்கு பின்பு தலித் மக்கள் ஆலய நுழைவு என சாதனை செய்திகளை உலகம் முழுவதும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

ஆனால், ஆதிக்க சமூகத்திற்கு எங்கிருந்தோ வந்த அழுத்தத்தின் காரணமாக அறநிலையத்துறை அதிகாரிகள் அன்று இரவே கோவிலை பூட்டினார்கள்.

சமத்துவ பொங்கல் வைத்த பின்னர் தான் கோவில் திறக்கப்படும் எனக் கூறி இன்று வரை கோவில் திறக்கப்படவில்லை.

சமத்துவப் பொங்கல் எப்போது? அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு தெரியுமா?

ஆதிக்க சாதியைச் சார்ந்த உயர்மட்ட அழுத்தமே கோவில் மூடப்பட்டதற்கான காரணம் என்று தலித் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கோவில் பூட்டப்பட்டதை தொடர்ந்து இரவோடு இரவாக இளைஞர் படை அமைக்க காரணமாக இருந்த முருகன் என்பவரின் தலை துண்டிக்கப்படும் என நேரில் வந்து ஆதிக்க சாதியினர் மிரட்டி உள்ளனர். அமைதிப் பேச்சுவார்த்தையில் ஆக்கப்பூவமாக பங்கெடுத்த இந்திரா என்பவரின் மளிகைக் கடை தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

80 ஆண்டுகளாக கட்டிக் காத்த தீண்டாமை சனாதன தர்மத்தை இன்றைய இளைஞர்கள் தான் கற்ற கல்வியால் ஆலய நுழைவை சாத்தியமாக்கினார்கள். இதனை பொறுத்துக் கொள்ள முடியாத ஆதிக்க சாதியினர் 2500 குடும்பங்கள் வசிக்கும் ஒட்டுமொத்த கிராத்தையே, தீண்டாமை கொடுமைக்கும், சமூக புறப்பணிப்புக்கும் உள்ளாக்கி இருக்கிறார்கள்.

ஜனவரி 30 ஆலய நுழைவு அன்று நடுநிலை வகித்த மாவட்ட நிர்வாகம், மாவட்ட காவல்துறை, இந்து அறநிலையத்துறை ஆகிய அனைத்தும் இன்றைய சமூகப்புறக்கணிப்புக்கும், தீண்டாமை கொடுமைக்கும் பதில் ஏதும் சொல்லாமல் மவுனம் சாதிக்கிறார்கள்.

உண்மை செய்திகளை உலகுக்கு தெரிவிக்க வேண்டிய காட்சி ஊடகங்களையும், பத்திரிகைகளையும், செய்தி வெளியிடாமல் அதிகார வர்க்கம் தடுக்கிறது.

**நடந்து கொண்டிருப்பது சாதிய வன்கொடுமையின் உச்சம் என தெரிந்தும், குற்றவாளிகள் மீது வன்கொடுமை வழக்குகள் பதியப்படவில்லை. கொலை மிரட்டல் விடுத்தவரையோ, கடையை தீ வைத்து கொளுத்தியவரையோ இதுவரை காவல்துறை கைது செய்யவில்லை.**

ஆண்டான் – அடிமை சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட வர்க்க சுரண்டல் முறை தற்போது எவ்வாறு கார்ப்பரேட் முறைக்கு மாற்றப்பட்டு சுரண்டல் முறை தொடர்கிறதோ, அதே போல் பொருளாதார சுரண்டலுக்காக கட்டமைக்கப்பட்ட இந்த சாதிய அமைப்பு இன்று புதிய பரிணாமம் அடைந்துள்ளது.

சமூக பொருளாதார அறிவியல் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் பயன் தராத இந்த சாதிய அமைப்பு அரசியல் வாதிகளுக்கும், அதிகார வர்க்கத்திற்கும் மட்டுமே லாபம் தருகிறது என்பதை ஆதிக்க சமூகங்கள் உணர வேண்டும்.

தென்முடியனூர் கிராமத்தில் பற்றவைக்கப்பட்டுள்ள சாதி தீயை மேலும் பரவ விடாமல் உடனடியாக அணைக்க வேண்டும். தமிழக அரசு உடனடியாக தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும்.

தொடர்புக்கு: 99520 23935

## திருமண விழாவில் கட்சி வளர்ச்சி நிதி



சென்ட்ரல் வங்கி ஊழியர் சங்கத் தலைவர் தோழர் ஏ.சையது இப்ராஹீம் அவர்களின் மகள் டாக்டர் எஸ்.ஃபாத்திமா ரிஹானாவுக்கும், முஹமது ஷாருக்கானுக்கும் திருமணம் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கட்சி வளர்ச்சி நிதியாக தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தியிடம் ரூ.5000 வழங்கப்பட்டது.

1 ம் பக்கத் தொடர்ச்சி

அந்தத் தியாக வரலாற்றில் முக்கியமான அத்தியாயம்தான் மறைந்த மாணிக்கம் அவர்களும், இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய அய்யா நல்லகண்ணு அவர்களும்!

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் எத்தனையோ சதி வழக்குகள் போடப்பட்டன. இந்தியாவின் விடுதலைக்காக மக்களுக்காக புரட்சிகரக் கொள்கைகளுக்காகப் போராடுபவர்கள் மீது அந்த வழக்குகள் போடப்பட்டன. அப்படி கைது செய்யப்பட்ட பலபேர் ஆயுள் தண்டனையையும் தூக்குத் தண்டனையையும் சிறைச்சாலை சித்திரவதைகளையும் அனுபவித்திருக்கிறார்கள்.

நம்முடைய அய்யா நல்லகண்ணு அவர்கள் எட்டாண்டு காலம் சிறையில் இருந்தவர் என்றால், தோழர் மாணிக்கம் அவர்கள் ஐந்தரை ஆண்டு காலம் சிறையில் இருந்திருக்கிறார்.

நாட்டின் விடுதலைக்கு முன்பும் பின்பும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பலமுறை தடை செய்யப்பட்டுள்ளது. இயக்கத்தினுடைய புரட்சிகரமான கொள்கைகளுக்காகத் தடை செய்யப்பட்டது. அப்போதெல்லாம் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள்.

கம்யூனிஸ்ட் தலைவர்கள் சிலரை மறைத்து வைத்து அடைக்கலம் கொடுத்தவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தோழர்கள் பலருக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். மூத்த தோழர்கள், இளையவர்களுக்கு இந்த வரலாற்றைச் சொல்லித்தர வேண்டும். அப்படி தலைமறைவாக இருந்த காலக்கட்டம் குறித்து அய்யா நல்லகண்ணு அவர்கள் விவரித்திருக்கும் காட்சிகள் உணர்ச்சிகரமாக இருக்கும்.

ஒரு முறை மாணிக்கம், நல்லகண்ணு ஆகியோர் நெல்லை மாவட்டத்தில் காட்டுக்குள் மலைக்குகை போன்ற இடத்தில் தங்குகிறார்கள். எல்லோருக்கும் டீ போட்டுத் தருகிறார் மாணிக்கம் அவர்கள். அப்பொழுது புகை வெளி யிலே வருகிறது.

அந்தப் புகையானது வெளியில் தெரிந்து ஆடு மேய்க்கும் ஆட்கள் பார்த்து போலீசுக்கு சொல்லி விடுகிறார்கள். போலீஸ் வருவதற்குள் இவர்கள் தலைமறைவாகி விடுகிறார்கள். ஆனால் இவர்கள் உள்ளேதான் இருக்கிறார்கள் என்று நினைத்து அந்த குகைக்குள் வெடிகுண்டு வீசுகிறது போலீஸ். இவர்கள் முன்கூட்டியே சென்றுவிட்ட காரணத்தால் அங்கிருந்து தப்புகிறார்கள். சினிமாவைப் போன்ற திகில் காட்சிகள் இவை.

தங்களது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் போராட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்தான் நம்முடைய மாணிக்கம் அவர்கள். அவருடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடுகிறோம். அத்தகைய உணர்வை இன்றைய இளைய சமுதாயம் பெற வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்களோடு மிக மிக நெருக்கமான நட்பைப் பேணி பாதுகாத்தவர் தோழர் மாணிக்கம் அவர்கள். உடல்நலம் பாதிக்கப்பட்டு தோழர் மாணிக்கம் 1999ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் நாள் மறைந்தார் என்று கேள்விப்பட்டதும் உடனடியாக அவரது குரோம்பேட்டை வீட்டுக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

அன்றைய தினம் அண்ணா அறிவாலயத்தில் சொற்பொழிவாளர் கூட்டம் நடந்து கொண்டு இருந்தது. தலைவர் அவர்கள் அதில் பங்கெடுத்து இருந்தார்கள். கூட்டத்தின் இடையில் அவருக்கு அந்தத் தகவல் தரப்பட்டது. அவசர அவசரமாக அதை முடித்துவிட்டு தோழர் மாணிக்கம் அவர்களது உடலுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றார்கள்.

அப்போது வெளியிட்ட அறிக்கையில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்ட சொற்களை இங்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''எந்தச் சூழலிலும் அமைதி இழக்காமல் அரசியல் நாகரிகத்தைப் பேணிப் பாதுகாத்தவர். தனிப்பட்ட முறையில் என்னுடைய நீண்ட நாளைய நண்பர். அவருடைய மறைவு எனக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பேரிழப்பாகும்'' என்று சொல்லி இருந்தார் தலைவர் கலைஞர் அவர்கள்.

மாணிக்கம் அவர்களது மறைவு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பேரிழப்பு என்று மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பேரிழப்பு என்று சொல்லி இருந்தார் தலைவர் கலைஞர் அவர்கள். இதனை அனைவரும் கவனிக்க வேண்டும்.

பொதுவுடமை இயக்கத்திற்கும் திராவிட இயக்கத்திற்கும் நட்பு இருக்கிறது. இது கொள்கைப்பூர்வமான நட்பு என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். கடந்த பிப்ரவரி மாதம் 21ஆம் நாள் மார்க்ஸும் எங்கெல்சும் வெளியிட்ட ''கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை''யின் 175ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அறிக்கையை முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் யார் தெரியுமா? தந்தை பெரியார் அவர்கள்.

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துக்கு கருத்தியல் ரீதியான ஆசானாக இருந்தவர் பொதுவுடைமைக் கருத்தியலாளர் 'புரட்சிப் புயல்' ம.வெ.சிங்காரவேலர் அவர்கள். அந்த நட்பின் தொடர்ச்சியாகத்தான் நாம் இப்போது ஒரு அணியாக, ஒரே அணியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த அணியானது ஜனநாயகம் காக்க, சமத்துவத்தை நிலைநாட்ட, சமதர்மத்தைக் காக்க, சுயமரியாதை உணர்வை ஊட்டுவதற்காக இப்போது போல எப்போதும் நாம் இணைந்து செயல்பட வேண்டும் என்று மாணிக்கம் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த ஈரோடு கிழக்கு தொகுதியினுடைய இடைத்தேர்தலைப் பற்றி. மிகப்பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. இது நம்முடைய ஒற்றுமைக்குக் கிடைத்திருக்கக் கூடிய மாபெரும் வெற்றி!

இந்த அரசினுடைய இரண்டாண்டு காலச் சாதனைகளுக்குக் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி இந்த இடைத்தேர்தல்! ஆனால், அதே நேரத்தில் நமக்கான பெரிய களம் காத்திருக்கிறது. அதுதான் நாடாளுமன்றக்களம்! நாடாளுமன்றத்தின் தேர்தல் களம்! தமிழ்நாட்டைச் சேர்த்து புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டும் வெற்றி பெற்றால் போதாது. இந்தியா முழுமைக்கும் நம்முடைய கூட்டணி வெற்றி பெற்றாக வேண்டும். மதவாத வகுப்புவாத எதேச்சதிகார சக்திகள் வீழ்த்தப்பட வேண்டும். இதனை என்னுடைய பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டத்தில் அகில இந்திய தலைவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு குறிப்பிட்டுச் சொன்னேன்.

தமிழ்நாட்டைப் போன்ற ஒற்றுமை அனைத்து மாநிலங்களிலும் உருவானால்தான் வெற்றி பெற முடியும். வெறும் கையிலே முழம் போடக் கூடாது என்பார்கள். எனவே, ஒற்றுமைக்கரங்கள் சேராமல் வெற்றிக் கனியை நாம் பறிக்க முடியாது.

2024 தேர்தல் என்பது வெறும் தேர்தல் அல்ல. அது ஒரு கொள்கை யுத்தம்! அந்த கொள்கை யுத்தத்திற்கு வியூகம் வகுப்பது ஒருபக்கம் என்றால். அதற்கான படைவீரர்களை உருவாக்குவது இன்னொரு பக்கம். இன்று நம்முடைய இயக்கங்களை நோக்கி ஏராளமான இளைஞர்கள் ஆர்வத்துடன் வந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த இளைஞர்களுக்கு கொள்கைப் பயிற்சி அளிக்க வேண்டும்.

திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி நடத்தி வருகிறது. இதுபோல் மார்க்சிய கொள்கை வகுப்புகளையும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தொடர்ந்து நடத்த வேண்டும். இத்தகைய வகுப்புகளை அதிகமாக நடத்தியவர் தோழர் மாணிக்கம் அவர்கள்.

''மார்க்சின் கொள்கைகள் பிளவுபடுத்தும் கொள்கை' என்றெல்லாம் இந்தக் காலத்தில் சிலரால் சொல்ல முடிகிறது என்றால் அதற்குத் தக்க பதில் சொல்லக் கூடிய கடமை நமக்கு இருக்கிறது. சாதி, மதம், இனம், பணம், பாலினம் என எந்த வேறுபாடும் பார்க்காமல் நாம் அழைக்கும் 'தோழர்' என்ற ஒற்றைச் சொல்லை விட ஒற்றுமை மருந்து உண்டா?

''உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்' என்பதை விட ஒற்றுமை முழக்கம் வேறு இருக்க முடியுமா?

கர்நாடகாவில் இருந்து வந்து தஞ்சை மாவட்ட உழவர்களுக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் சீனிவாசராவ் அவர்கள். இவர்கள் எல்லாம் ஒற்றுமையின் சின்னங்கள் அல்லவா?

ஆனால், சாதியின் பேரால் மக்களைப் பிரித்த சனாதனத்தின் ஆதரவாளர்கள், மார்க்ஸை பிளவுவாதி என்கிறார்கள் என்றால், மார்க்சிய கருத்தியலை நாடு முழுவதும் விதைக்கும் கடமை மதச்சார்பற்ற முற்போக்கு இயக்கங்கள் அனைத்திற்கும் இருக்கிறது.

நமது இயக்கங்களை நோக்கிவரக்கூடிய இளைஞர்களைக் கொள்கையில் உரம் பெற்றவர்களாக மாற்றுவதுதான் தோழர் ப.மாணிக்கம் போன்ற தியாகிகளுக்கு நாம் செலுத்தக்கூடிய உண்மையான வீரவணக்கமாக இருக்க முடியும். பீகார் மாநிலத்திலிருந்து வந்து இங்கு தொழில் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களிடம் கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக அரசியல் லாபம் தேட நினைக்கக் கூடியவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லுகிறேன்.


பீகார் மாநிலத்தினுடைய முதலமைச்சர் நிதீஷ்குமார் அவர்களிடத்தில் நான் தொலைபேசியில் பேசிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் எவ்வளவு பிளவை ஏற்படுத்த நினைத்தாலும் ஒருக்காலும் இந்தக் கூட்டணியை பிளவுபடுத்திட முடியாது என்பதை மாத்திரம் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி. யார் சட்டம் ஒழுங்கை கெடுக்கின்ற சூழ்நிலையில் ஈடுபட்டாலும் அவன் எந்தக் கொம்பனாக இருந்தாலும் இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம்! அடக்குவோம்! என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் உறுதிசொல்லி, தோழர் ப.மாணிக்கம் அவர்களுடைய புகழ் என்றைக்கும் நிலைத்து நிற்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## இரா. நல்லகண்ணு

தோழர் மாணிக்கத்தின் நூற்றாண்டு விழாவை நாம் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம். அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். சிறு வயது முதல் கட்சிப் பணிகளில் ஈடுபட்டு மக்களுக்காகப் பணியாற்றியவர் மாணிக்கம்.

ஒரு கம்யூனிஸ்ட் கட்சி எப்படி இயங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். எல்லோரும் ஒருமித்து முடிவெடுக்க வேண்டும் என்று முயற்சிப்பார். எப்படி நாம் செயல்பட வேண்டுமென வழிகாட்டுவார். இன்றைக்கு இந்தியாவில் சுதந்திரத்திற்கு பின்னால் எந்த வித பெரிய சமுதாய மாற்றமும் இல்லாமல் இருக்கிறது, அதை மாற்ற வேண்டும் என போராடியவர் மாணிக்கம். அவரைப் போன்றே பல தலைவர்கள் நமக்கு வழிகாட்டி உள்ளனர்.

இன்றைக்கு இந்திய அரசியல் சாசன சட்டமும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. அதை தடுத்து இந்த சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும். இந்த அரசாங்கத்தை சமத்துவ சமுதாயத்தை நோக்கி நடை போட வைக்க வேண்டும்.



சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பாதுகாத்தால் தான் ஜனநாயகத்தை நாம் பாதுகாக்க முடியும். இதுதான் தோழர் ப. மாணிக்கம் அவர்களுக்கு நாம் செலுத்துகிற அஞ்சலியாக இருக்கும்.

## இரா.முத்தரசன்

தோழர் ப.மாணிக்கம் அவர்களால் உருவாக்கப்பட்ட பல பேர் இன்றைக்கு தலைவர்களாக இருக்கிறார்கள். தனது தந்தையின் முகத்தைப் பார்க்க கூட அவரால் வர முடியவில்லை. இத்தனைக்கும் அவர் சிறையில் கூட இல்லை வெளியில் தான் இருந்தார். ஆனால் தலைமறைவு வாழ்க்கையில் இருந்தார். எப்படியும் தனது தந்தையின் உடலைப் பார்க்க மகன் மாணிக்கம் வருவார் என காவல்துறை எதிர்பார்த்தது. அவரை எப்படியும் கைது செய்து விடலாம் என்ற நப்பாசையோடுதான் காவல்துறை இருந்தது.

தனது தந்தையின் இறுதி நிகழ்வில் பங்கேற்றால், தான் கைது செய்யப்படலாம், இதனால் கட்சிக்கு சங்கடம் ஏற்படலாம் என்பதனால் அவர் அதில் பங்கேற்கவில்லை. இதே போல் தனது சகோதரி திருமணத்திலும் அவரால் பங்கேற்க முடியவில்லை. ஏனென்றால் அப்போது அவர் சிறையில் இருந்தார். இப்படி வாழ்க்கையில் பல சங்கடங்களை அனுபவித்தவர் அவர்.

தோழர் ப.மாணிக்கம் ஓர் நிறைகுடம். அவரது அரசியல் வாழ்க்கை மிகுந்த துன்பமான வாழ்க்கை. பொது வாழ்க்கையில் இப்படி துன்பம் யாருக்கும் வரவே கூடாது. ஒரு பக்கம் அரசின் நெருக்கடிகள், மறுபக்கம் அமைப்பியல் நெருக்கடிகள் என ஏக காலத்தில் பல நெருக்கடிகளை சந்தித்தவர். அந்த இரண்டையும் அவர் எதிர்கொண்டு சமாளித்து வெற்றி பெற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிலைநிறுத்தினார்.



பல மாவட்டங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சொந்த அலுவலகங்கள் இருக்கிறது. அவையெல்லாம் உருவாக அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்களுக்கு நம்பிக்கையூட்டி அதை எல்லாம் உருவாக்கிய பெருமை ப.மாணிக்கம் அவர்களையே சாரும்.

ஜனசக்தி ஆசிரியர், தாமரை ஆசிரியர் என பத்திரிகைகளின் ஆசிரியர் பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டவர். ஒரு கம்யூனிஸ்ட் என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக இருந்தவர்.

எந்தெந்த பிரச்சினைகளை எவ்வாறு எதிர் கொள்ள வேண்டும்? எப்படி எதிர்கொள்ள வேண்டும்? எந்த நேரத்தில் எதிர் கொள்ள வேண்டும்? காலம் நேரம் கருதி எதிர்கொள்ள வேண்டும்? என்பதை எல்லாம் கற்றுத் தந்த குருநாதர். அவருக்கு நாம் நூற்றாண்டு விழா எடுக்கிறோம். இந்த நேரத்தில் இருக்கும் அரசியல் சூழ்நிலையில் அவர் இருந்திருப்பாரேயானால் அவர் எவ்வாறு அதை எதிர்கொண்டிருப்பார், என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஒன்றிய ஆட்சிக்கு யார் வரவேண்டும் என்பதனை விட, யார் வரக்கூடாது என்பதில் நாம் உறுதியாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். கொள்கை அடிப்படையில் உருவான நமது கூட்டணி வெற்றி நடை போட்டுக் கொண்டுள்ளது. நமது வெற்றி தொடர வேண்டும்.

வட மாநில தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தினசரி வந்து கொண்டிருக்கிறார்கள். சென்னை ரயில் நிலையத்தில் தினசரி ஆயிரக்கணக்கில் வந்து இறங்கி கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒன்று தெளிவாகிறது. இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்று இவர்கள் பேசுவது பொய் என்பது தெளிவாகிறது. இந்தி படித்தவர்கள், இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் தான் இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவேன் என்று சொன்னவர், வேலை கொடுத்திருந்தால் இந்த நெருக்கடி வந்திருக்காது! அந்த தொழிலாளர்கள் வேலை தேடி அலைய வேண்டியதில்லை. பல ஆண்டுகளாக பணியாற்றும் அந்த தொழிலாளர்களைப் பற்றி தேவையற்ற வதந்தி பரப்பப்படுகிறது. இது பொய் செய்தி என்பதனை பலரும் கண்டித்திருக்கிறோம். இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

சிலர் கலைப்பேன், கவிழ்ப்பேன், உடைப்பேன் என்று பேசுகிறார்கள். இதுபோன்ற வதந்திகளை பரப்பிக் கொண்டுள்ளனர். தங்கள் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றனர். இந்த அற்பத்தனத்திற்கு

தமிழ்நாடு ஒரு போதும் இயாகாது. நாம் கவனமாக இருந்து இவற்றை ஒரு கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

## கே.சுப்பராயன்

அண்ணல் காந்தியடிகளின் அறைகூவலை செவிமடுத்து தனது 14வது வயதிலேயே தேசிய விடுதலை இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டவர். தேசிய விடுதலை இயக்க வீரராக தாமிரப் பட்டயம் பெற்று வாழ்ந்தவர். பல்வேறு போக்குகள் பொதுவாழ்வில் தென்பட்டாலும், அவர் கம்யூனிஸ்ட் இயக்க பாதையைத் தேர்ந்தெடுத்தார்.



அதுவும் அந்தக் காலத்தில் கம்யூனிச பாதையை தேர்ந்தெடுத்தார். கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில், கம்யூனிஸ்ட் என்று பகிரங்கமாக வெளிவந்தார். சதி வழக்குகளும், சுட்டுக் கொல்லப்படுவதும், மிருகங்களாலும்கூட தாங்க முடியாத சித்திரவதைகளை தாங்க வேண்டிய கட்டாயம் நிலவிய சூழ்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சியை ஒருவர் இனங்கண்டு தேர்ந்தெடுத்தார் என்றால், அவரது தியாக மனம் எத்தகையது என்று சிந்தியுங்கள்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பாலதண்டாயுதத்தோடு பழிவாங்கப்பட்டு, வெளியேற்றப்பட்ட மாணவர்களில் ஒருவர் தான் ப.மாணிக்கம். எனவே அவர் தேர்ந்தெடுத்த வழிமுறை என்பது மிகுந்த கவனத்திற்குரியதாகும்.


தேசிய விடுதலை இயக்கத்திலும் ஈடுபட்டு, அதற்குப் பின்னர் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் விடுதலை பரிபூரணமாக மலர வேண்டும், ஒற்றை விடுதலை அல்ல, மும்முனைகளிலும் விடுதலை வேண்டும், என்று அதற்காகவே தனது வாழ்க்கையை பிரதிபலன் பார்க்காமல் அர்ப்பணித்தவர். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேருவதால், எந்த லாபமும் இல்லை என்ற போதும், சிறைகளில் வதைபட்டார். தடியடிக்கு ஆளானார். ஏன்?

தோழர் ப.மாணிக்கம் விளம்பர வெளிச்சத்தில் சிக்காத ஒரு அற்புதமான புதைந்து கிடக்கும் வைரம். அந்த வைரத்தை விளம்பரங்கள் வெளிச்சம் போட்டு காட்டவில்லை. அப்படி வெளிச்சம் போட்டு காட்டுவதை அந்த வைரம் விரும்பியதும் இல்லை. ஒரு கம்யூனிஸ்ட் ஆளுமையாக நிகழ்கால சவால்களை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு போராட கற்றுக் கொடுத்த தளகர்த்தர் ப.மாணிக்கம்!

ஆரவாரம் அவருக்கு தெரியாது. தன்னை வெளிச்சத்தில் காட்டிக் கொள்ள விருப்பமில்லாதவர். ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து மடிந்து போனார். தியாகத்தால் ஒளிவீசி பிரகாசித்த உத்தம திலகம் தோழர் ப.மாணிக்கம். அந்த மகத்தான மனிதர் விரும்பியவாறு இந்தியாவில் சோசலிச சமுதாயத்தை அமைக்க சபதம் ஏற்போம்.

## கி.வீரமணி

பொதுவாழ்வுக்கு எடுத்துக்காட்டான மாமனிதர் ப.மாணிக்கம் எனக்கு ஒரு சொந்தம், உரிமை உண்டு. அது என்னவென்றால், அருமைத் தோழர், மாமனிதர் மாணிக்கம் அவர்கள், கடலூரில், எங்கள் தெருவிற்கு அருகில் இருந்தவரோடு பழகிய பான்மை உண்டு!



என்னதான் உலகப் பார்வை நமக்கிருந்தாலும், உள்ளூர்ப் பாசம் எப்பொழுதுமே போகாது. அந்த வகையிலே, கடலூரில், எங்கள் தெருவிற்கு அருகில் இருந்தவரோடு பழகிய பான்மை உண்டு. கொள்கை உறவு, உரிமை எப்பொழுதும் உண்டு அது நிரந்தரமானது. அதற்கடுத்தபடியாக, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நாங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டவர்கள். எங்களுக்கு முன்னோடி என்றால், தோழர் பாலதாண்டாயுதமும், தோழர் ப.மாணிக்கம் போன்றவர்கள். போராட்டக் குணத்தோடு, பல நேரங்களில் பெரியார் திடலுக்கு வந்து, விடுதலை அலுவலகத்திலேயே பல செய்திகள் குறித்து விவாதித்திருக்கிறார். அந்தச் செய்திகள் எல்லாம் ஒரு பெரிய அறிவுச் சுரங்கத்திலிருந்து கருத்துகள் வருவதுபோல, மிகச் சிறப்பாக இருக்கும்.

ப.மாணிக்கம் அவர்களைப் பார்த்தவுடன், மாமனிதர் என்று சொல்லுகின்ற நேரத்தில், பொது வாழ்க்கைக்கு வருகின்றவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும்; கொள்கையை ஏற்கிறவர்கள் எப்படியெல்லாம் அதற்கு ஆயத்தமாகி விலை கொடுக்கவேண்டும் என்பதற்கு அவர் ஒரு சிறந்த உதாரணம், எடுத்துக்காட்டு.

இன்றைக்கு தோழர் மாணிக்கம் இருந்தால், எப்படிப் போராடுவார்? என்ன கருத்தைச் சொல்லுவார்? எப்படி இயக்கத்தை நடத்துவார்? எத்தகைய கூட்டணியை கட்டுவார்? என்று நினைக்கிறோமோ, அதைத்தான் இப்பொழுது செய்திருக்கிறார்கள். இதுதான் இந்தக் கொள்கைக் கூட்டணியினுடைய, இந்த அரங்கத்தினுடைய பெருமை!

எனவே, எதிரிகள் மிகப்பெரிய அளவிற்கு மறைமுகத் திட்டம் வைத்திருக்கிறார்கள்; முகமூடி போட்டு வருவார்கள்; அந்த முகமூடியைக் கிழித்து மக்களுக்கு விளக்கவேண்டியது நம்முடைய கடமையாகும். அந்தப் பணியைச் செய்வதற்குத்தான் நாம் அத்துணைப் பேரும் இருக்கிறோம்.

ப.மாணிக்கம் அவர்களுடைய நூற்றாண்டு நிறைவு விழா சோசலிச சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்பதற்காகவே!

## கே.எஸ்.அழகிரி

பொதுவுடைமைத் தோழர்கள் தியாகத்திற்கு என்றே பிறந்தவர்கள். ஏராளமான தியாகங்களை சுதந்திரப் போராட்டக் காலத்திலும், அதற்குப் பிறகும் செய்திருக்கிறார்கள். இவ்வளவு தியாகங்கள் செய்த ஒரு இயக்கம் இருப்பது அரிதினும் அரிது.

தமிழகத்தின் ஆளுநர் மார்க்சியத்தை குறை சொல்கிறார். இந்தியாவில் இருக்கின்ற மதச்சார்பற்ற அரசியல் கட்சிகள், ஜனநாயகத்தை நம்புகிற கட்சிகள், ஜனநாயக வழியில் நடைபெற வேண்டும் என்கிற அரசியல் தத்துவங்கள் எல்லாமே மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்குகிறதே ஒழிய வேறு நோக்கங்கள் எதுவும் இல்லை.

காங்கிரஸ் கட்சி தனது பிரகடனமாக ஜனநாயக சோசலிசம் என அறிவித்தது. ஜனநாயக சோசலிசம் என்பது மார்க்ஸ் சொன்னதுதான்! அன்றைக்கு ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு நடைமுறையை வைத்து அதற்கு ஜனநாயக சோசலிசம் என்று கூறினார். இதே மாதிரிதான் எல்லோருமே. கலைஞர் அவர்களே பல்வேறு நேரங்களில் அதை பிரதிபலித்திருக்கிறார். "நான் அண்ணாவை பார்க்காமல் இருந்திருந்தால், பெரியாரை பார்க்காமல் இருந்திருந்தால் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்திருப்பேன்" என்று கலைஞர் சொன்னார்.




வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்று சொன்னார். அதுவும் மார்க்சியம்தான். அதனால் எல்லாவற்றுக்கும் அடிப்படை மார்க்சியம் என்பதனை பாரதிய ஜனதா கட்சியினர் உணர மாட்டார்கள். மார்க்சியத்தை, காந்தியத்தை, ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அவர்கள்.

நம்முடைய எதிரிகள் யார் என்பதை கண்டுபிடிக்க நாம் அச்சப்பட வேண்டியதில்லை, தயங்க வேண்டியதில்லை. அவர்கள் தெளிவாக நம்முடைய கண்களுக்கு தெரிகிறார்கள். எனவே அவர்களை அப்புறப்படுத்துவதுதான் நமது அரசியலாக இருக்க வேண்டுமே ஒழிய, வேறு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த மேடையில் பேசிய அனைத்துத் தலைவர்களும் சொன்னார்கள். அரசியல் தெளிவு என்பது தமிழகத்தில் இருக்கிறது. அரசியல் குழப்பம் இல்லாமல் செல்லும் ஒரு மாநிலம் தமிழ்நாடு.

தியாகங்களுக்கு சொந்தக்காரரான மாணிக்கம் அவர்களுக்கு நூற்றாண்டு விழா நடத்துவதும், மலர் வெளியிடுவதும், நாம் செய்ய வேண்டிய கைமாறு, அதை அவசியம் செய்ய வேண்டும். அவர் சார்ந்த இயக்கம் மட்டுமல்லாமல், நட்பாக இருக்கிற இயக்கங்கள் எல்லாம் சேர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருக்கிற முதலமைச்சரும் வந்து மாணிக்கம் அவர்களை பாராட்டுவதும், வாழ்த்துவதும் வரலாற்றின் தலையாய கடமை. ஆட்சியாளர்கள்தான் அவரை வேட்டையாடினார்கள். அந்த காலத்தில் அப்படித்தான் அது அமைந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு ஆட்சியின் தலைவரே வந்து நூலை வெளியிடுகிறார். எவ்வளவு மாற்றம் வந்திருக்கிறது.

## வைகோ

ஒல்லியான உருவம், கதராடை அணிந்திருப்பார், கருத்த மேணி, நழுவி விழுந்துவிடுமோ என்கிற வகையில் ஒரு மூக்கு கண்ணாடி இந்த உருவம்தான் ப.மாணிக்கம் அவர்கள். அவர் பதினாறு ஆண்டுகள் நெல்லை மாவட்டச் செயலாளராக இருந்தார்.



அவர் தொடக்கத்தில் காந்திய கொள்கையில் ஈடுபாடு கொண்டு, சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டார். காந்திய கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்தவர், விவேகானந்தரை மிகவும் விரும்பினார். விவேகானந்தர் மன்றத்தை துவங்கி அரங்க கூட்டங்களை நடத்தினார். இப்படித்தான் தோழர் பாலதண்டாயுதத்தோடு தொடர்பு ஏற்பட்டது. நெல்லிக்குப்பம் தோழர்கள் அனுப்பி வைத்த கம்யூனிச நூல்களைப் படித்தார். தடை செய்யப்பட்ட ஜனசக்தி பத்திரிகை, பிரசுரங்களை படித்தார். இதன் மூலம் காந்தியத்திலிருந்து படிப்படியாக வெளியேறி கம்யூனிஸ்ட்டாக பரிணமித்தார். கம்யூனிஸ்டாக மாறியதால் தான் அவர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அவரது அயராத பணியால் நெல்லையில் கம்யூனிஸ்ட் கட்சி வேரூன்றியது. அப்படிப்பட்ட மகத்தான தலைவருக்குத்தான் நூற்றாண்டு விழா. அவரது பெயரால் மதவெறியை வீழ்த்த சபதமேற்போம்.

## கே.பாலகிருஷ்ணன்

தோழர் ப.மாணிக்கம் சிறு வயதிலேயே தன்னை சுதந்திரப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அதை நிர்வாகம் தடுக்க முயன்றது. ஆனால் 3 மாத காலம் தொடர்ந்து போராடினார்கள். பல்கலைக்கழக நிர்வாகம் 14 மாணவர்களை நீக்கியது. தோழர் பாலதண்டா யுதமும், ப.மாணிக்கம் ஆகியோரும் வெளியே அனுப்பப்பட்டனர்.

அவர்கள் பிற்காலத்தில் சிறந்த கம்யூனிஸ்ட்டாக மாறி மக்கள் பணியாற்றினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விடுதலைப் போராட்டத்தின் ஊன்றுகோலாக மட்டுமல்லாமல் உமாநாத், பாலசுப்பிரமணியம் போன்ற பல்வேறு தலைசிறந்த கம்யூனிஸ்ட்டுகளை உருவாக்கிய இடம். தோழர் சங்கரய்யா, ஆர்.நல்லக்கண்ணு போன்றவர்களுடன் இணைந்து பணியாற்றியவர் தோழர் மாணிக்கம். 14 ஆண்டுகாலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக பணியாற்றியவர்.



கம்யூனிஸ்டுகள் தங்கள் வசந்தத்தைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை, மக்களின் வாழ்வுக்காகக் கவலைப்பட்டவர்கள். நாட்டிற்கு ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு அதற்குச் சமாதி கட்டிய பெருமை கம்யூனிஸ்ட்டுகளுக்கு உண்டு.

வகுப்புவாத மதவெறி சக்திகளின் மிகப்பெரிய சவால் இன்று நம்முன் எழுந்துள்ளது. மதவெறி சக்திகள் நாட்டையே பிளவுபடுத்தி நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட்டுகள், கிறித்துவர்கள், இஸ்லாமியர்கள் தங்களுடைய எதிரி என்று கூறியதோடு, அவர்களை அழிக்கவும் நினைக்கிறார்கள்.

நாட்டை இந்து ராஷ்டிரமாக மாற்றும் முயற்சியில் ஈடு பட்டு வருகிறார்கள். ஒற்றை ஆட்சி என்ற பாசிச ஆட்சியைக் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். கடந்த 8 ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்க ளின் சொர்க்க பூமியாக இந்தியாவை மாற்றி விட்டார்கள். வரலாறு காணாத வகையில் உழைப்பாளி மக்கள் சுரண்டப்படுகிறார்கள். இந்த நாட்டை பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்முன் உள்ளது. எனவே மதச்சார்பற்ற சக்திகளை ஒன்றிணைத்து பாசிச சக்திகளை முறியடிப்போம், வெற்றி பெறுவோம்.

## தொல்.திருமாவளவன்

தனது மொத்த வாழ்க்கையில் 55 ஆண்டுகள் பொது வாழ்க்கைக்கு அர்ப்பணித்தவர். அதில் ஐந்தரை ஆண்டுகள் சிறையில் வாடியவர். தன்னை முழுமையாக பாட்டாளி வர்க்க மீட்சிக்கு ஒப்படைத்துக் கொண்ட தலைவர் ப.மாணிக்கம். அந்த மாமனிதனை நினைவு கூரும் விழா இந்த நூற்றாண்டு நிறைவு விழா.

மதுரை சதி வழக்கு, நெல்லை சதி வழக்கு போன்றவற்றில் சிக்கி சிறையில் இருந்துள்ளார். பொது வாழ்வு என்பது சுகவாழ்வு அல்ல! பொதுவாழ்வு என்பது இடர்மிகு வாழ்வு என்பனை வாழ்ந்து முடித்துள்ளார். இப்படித்தான் பொதுவுடைமை இயக்கத் தலைவர்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. இந்திய அரசியலில் பொதுவுடைமை இயக்கம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை நாம் அறிவோம். விவசாயிகளை, தொழிலாளர்களை, விவசாயத் தொழிலாளர்களை அரசியல்படுத்தியதில், அமைப்பாக்கியதில் பொதுவுடமை இயக்கத்தின் பங்கு அளப்பரியது. போராட்டக் களத்தில் அவர்களை ஈடுபட வைத்ததில் பொதுவுடமை இயக்கத்திற்கு மகத்தான பங்களிப்பு உண்டு.



சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் நடைபெறும் வன்கொடுமைகளை கண்டிப்பதோடு நின்றுவிடாமல் அவற்றை எதிர்த்துப் போராடுவது, மக்களை போராட பயிற்றுவிப்பதில் மகத்தான பங்கு பொதுவுடமை இயக்கத்திற்கு உண்டு. காவிரிப் பகுதி மாவட்டங்களில் சாதிக் கொடுமைகள் தலைவிரித்தாடிய காலங்களில் ஒடுக்கப்பட்ட மக்களை அமைப்பாக்கி, அரசியல் படுத்தி அந்த கொடுமையை முறியடித்த பெருமை பொதுவுடமை இயக்கத்திற்கு உண்டு. நாங்கள் பாதிக்கப்பட்ட மக்கள் பின்னால் நிற்போம். அவர்களுக்காக போராடுவோம் என துணிந்து நின்றதுதான் கம்யூனிஸ்ட் இயக்கம். உழைப்பவர்களுக்காக, தொழிலாளர்களுக்காக, விளிம்பு நிலை மக்களுக்காக, சிறுபான்மையின மக்களுக்காக ஒரு பாதுகாப்பு அரணாக இன்றைக்கும் இருக்கக் கூடியவர்கள் கம்யூனிஸ்டுகள்.

எங்கிருந்தாவது பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு குரல் ஓங்கி ஒலிக்கிறது என்றால் அது கம்யூனிஸ்ட்டுகளின் குரல் தான். அது செங்கொடியின் குரல், அது செஞ்சட்டையின் குரல். அப்படிப்பட்ட பாரம்பரியத்தில் இருந்து வந்த தோழர் மாணிக்கத்தின் நூற்றாண்டு விழாவை நடத்திக் கொண்டிருக்கும் சூழலில் வகுப்புவாத சக்திகளை முறியடிக்க சபதம் ஏற்போம்.



எல்.கே.சுதிர்க பாசு

# சட்டத்தின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு

மார்ச் 8ம் நாள் உலக மகளிர் தினம் அனுசரிக்கப்பட்டது. இதற்கு முன் மகளிர் தினம் பிப்ரவரி 23ம் நாள் அனுசரிக்கப்பட்டு வந்தது. ஆனால் 1917ல் நடந்த ரஷ்ய புரட்சியில் பெருந்திரளான பெண்கள் எழுச்சியுற்று ஜார் மன்னருக்கு எதிராக அடிப்படை தேவைகளை வழங்கக்கோரி எழுச்சிமிகு போராட்டம் நடத்திய நாள் மார்ச் 8. அது ஒரு புரட்சி நாள். பெண்களின் எழுச்சி நாள்.

**பெண்களின் சட்ட போராட்டம்:**

அரசியல் சாசன சட்டத்தில் பெண்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் பொருட்டு பல்வேறு அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் பெண்களுக்கு எளிதாக கிடைத்துவிடவில்லை. நீண்ட சட்ட போராட்டத்தால்தான் அவர்களால் அதை பெற முடிந்தது. பெண்கள் தங்களின் உரிமைகளை மீட்டெடுக்க எப்படி நீதிமன்றத்தை அணுகி சட்ட போராட்டம் நடத்தி உரிமைகளை வென்றனர் என்பதை பார்ப்போம்.

1) University of Madras –vs- Shantha Bhai 1953 – இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு.

இந்த வழக்கில் சாந்தாபாய் என்பவர் ஒரு இணை கல்வி (co-education) கல்லூரியில் சேர்வதற்கு விண்ணபித்திருந்தார். இதற்கு சென்னை பல்கலைக்கழகத்தின் முன் அனுமதி பெற வேண்டும் என்று கூறி கல்லூரி நிர்வாகம், அவரது விண்ணப்பத்தை தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து சாந்தா பாய் சென்னை பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரியின் முதல்வர் மீது வழக்கு தொடுத்தார். சென்னை உயர்நீதிமன்றம் சாந்தாபாயின் மனுவை கல்லூரி ஏற்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதை எதிர்த்து சென்னை பல்கலைக்கழகம் உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் தொடுத்தது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் சென்னை பல்கலைக்கழகத்தின் உத்தரவு மற்றும் கல்லூரி நிர்வாகத்தின் முடிவு ஆகியவை இந்திய அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 14 மற்றும் 15 (3) ஆகியவற்றிற்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது. பெண்களின் கல்விக்கான போராட்டத்தில் இந்த வழக்கு ஒரு மைல்கல் வழக்காகும்.

2) C.B. Muthamma –vs- Union of India – 1979 இது பாலின பாகுபாட்டுக்கு எதிரான ஒரு முக்கியமான வழக்கு.

C.B.முத்தம்மா இந்திய நாட்டின் முதல் பெண் ஐ.எப்.எஸ் (Indian Foreign Service) அதிகாரி ஆவார். அப்போது UPSC யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் நடைமுறையில் இருந்த விதிமுறை பெண் I.F.S அதிகாரிகள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமானால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என்றும், அப்படி அனுமதி பெற்று திருமணம் செய்து கொண்டபிறகு அவர்களின் வேலையில் அரசுக்கு திருப்தியில்லை என்றால் அவர்களை வேலை நீக்கம் செய்யலாம் என்றும் குறிப்பிட்டிருந்தது. சி.பி.முத்தம்மா, (UPSC யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின்) விதிமுறை அரசியல் சாசன சட்டத்தின் பிரிவுகள் 14, 16 மற்றும் 21 க்கு முற்றிலும் எதிரானவை என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். வழக்கு விசாரணையில் இருக்கும் சமயத்தில் அரசு மேற்குறிப்பிட்ட இரண்டு விதிமுறைகளையும் வாபஸ் பெற்றுக்கொண்டது. வழக்கை முடித்து வைத்த நீதிமன்றம் "வழக்கு முடிந்து விட்டது ஆனால் பிரச்சனை இன்னும் முடியவில்லை" என்று கருத்து தெரிவித்திருந்தது.



முத்தம்மா தொடுத்த இந்த வழக்கால் பாலின பாகுபாடுக்கு எதிராக, உழைக்கும் பெண்களின் குரலை இன்னும் உயரவைத்தது. பெண்கள் பலர் தங்களின் உரிமைகளுக்காகவும், பாலின பேதத்திற்கு எதிராகவும் நீதி மன்றத்தை அணுக ஆரம்பித்தனர். அதில் ஒரு முக்கிய வழக்குதான்

3) Air India –vs- Nargeez Mirza 1983, இந்த வழக்கும் வேலை வாய்ப்பில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டில் வரலாற்று முக்கியத்துவம் வாழ்ந்த வழக்காகும்.

நர்கீஷ் மிர்ஜா என்பவர் ஏர் இந்தியா நிறுவனத்தில் விமான பணிப்பெண்ணாக வேலை பார்த்து வந்தார். அப்போது ஏர் இந்தியா நிறுவனத்தின் விதிமுறைபடி விமான பணிபெண்கள் 35 வயது பூர்த்தியடைந்து விட்டாலோ, திருமனம் செய்து கொண்டாலோ அல்லது முதல் முறையாக கர்ப்பமடைந்திருந்தாலோ பணியில் இருந்து ஓய்வு பெறவேண்டும்.

இதை எதிர்த்து நர்கீஷ் மிர்ஜா உச்ச நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் இந்திய அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 14, 16 மற்றும் 21 க்கு எதிரானது என்று வழக்கு தொடுத்தார். வழக்கை விசாரித்த உச்சநீதின்றம் திருமணம் செய்து கொள்வது, குழந்தை பெற்றுக்கொள்வது ஆகியவை ஒரு மனிதனின் இயற்கையான உரிமைகள். அவற்றை விதிமுறைகள் அமைத்து கட்டுப்படுத்தவதென்பது அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது.

ஒரு பெண் தனி மனித சுதந்தரத்திரம் – ஆண், பெண் இருவருக்காகவும், சட்டத்தால் பறிக்க முடியாது என்பதை நிலைநாட்டிய வழக்கு.

4) Menaka Gandhi –vs- Union of India -1978 – தனி மனித சுதந்திரம் பற்றிய ஒரு முக்கிய வழக்கு.

மேனகா காந்தியின் பாஸ் போர்ட் எந்த ஒரு காரணமும் இன்றி முடக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இதை விசாரித்த 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு உலமே இந்தியாவை திரும்பி பார்க்கும் அளவிற்கு ஒரு தீர்ப்பை அளித்தது. இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் – Golden Triangle- தங்க முக்கோணம் என்ற சட்ட கோட்பாட்டை உருவாக்கியது.

அதாவது அரசியல்சாசனசட்டதின் பிரிவு 14 – குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் முன் சமத்துவம், பிரிவு 19 குறிப்பிடப்பட்டுள்ள – பேச்சு மற்றும் கருத்துரிமை மற்றும் பிரிவு ரூ 21 குறிப்பிடப்பட்டுள்ள ரூ தனி மனித சுதந்திரம் ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. அதை பிரித்தெடுக்க முடியாது என்று தீர்ப்பளித்தது.

5) Husssainara Khatoon –vs- state of Bihar – 1979 –

நீதிமன்ற விசாரணை நிலுவையில் இருந்ததால் சிறைச்சாலையில் அடைப்பட்டு கிடந்த கைதிகளின் ஒருவர்தான் ஹுசைனரா காட்டுன். இவர் தொடுத்த வழக்கால்தான் உச்ச நீதிமன்றம், "துரிதமான வழக்கு விசாரணை ஒரு மனிதனின் அடிப்படை உரிமை" என்று தீர்ப்பளித்தது.

6) Shyarabano –vs- Union Of India

இந்த வழக்கில்தான் முதன் முதலாக உச்சநீதி மன்றம், முத்தலாக்கு முறை அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது.

மேற்குறிப்பிட்ட அனைத்து வழக்குகளிலும் பெண்கள் தங்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் வாழ்வியலுக்காக தாங்களே சட்டத்தை குறிப்பாக அரசியல் சாசன சட்டத்தை செயல்பட வைத்ததை உணரலாம்.

**நீதிமன்றத்தின் அரவணைப்பு:**

சமீபத்தில் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் பெண்களின் உரிமைகள் என்று வரும்போது பல்வேறு புரட்சிகர தீர்ப்புகளை அளித்து வருகின்றனர்.

சமீபத்தில் உச்சநீதிமன்றம் கற்பழிப்பு வழக்குகளில் ஒரு பெண் உடலுறவில் ஈடுபட்டு உள்ளாரா? இல்லையா? என்பது கண்டுபிடிக்க நீண்ட நாட்களாக கடைபிடிக்க பட்டுவந்த இரட்டை விரல் பரிசோதனை முறையை முற்றுலும் தடை செய்தது – State of Jharkhand –vs- Shailendara kumar Raj @ Pondy Raj.

திருமணமாகாத பெண்களும், 24 வாரங்களை கடந்திருந்தாலும், கருக்கலைப்பு செய்து கொள்ளலாம் என்று மற்றுமொரு புரட்சிகர தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது – X –vs- Prinicpal Secretary, Health and Family Welfare Department, Govt of NCT Delhi.

கர்நாடக உயர்நீதிமன்றம் Marital Rape எனப்படும் மனைவியுடன் கட்டாய தாம்பத்திய உறவும் கற்பழிப்புதான் என்று – hirishikesh sahoo –vs- state of Karnataka என்ற வழக்கில் அதிரடியாக தீர்பளித்தது. இவ்வழக்கு தற்சமயம் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

ஒரு பெண் விசாரணை கைதியாய் இருப்பதால் அவருக்கு கண்ணி தன்மை பரிசோதனை செய்வதென்பது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று – சகோதரி அபையா வழக்கில் தில்லி உயர் நீதிமன்றம் அதிரடி தீர்பளித்தது.

பெண்கள், இன்று தங்களின் கல்வி, பொருளாதாரம், சமூக அந்தஸ்து மற்றும் சுதந்திரத்திற்காவும் ஒவ்வொரு நாளும் உரிகைகளுக்காவும் பெண்கள் சட்ட ரீதியாக தங்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கு பெரிதும் உதவியாக இருந்தது அரசியல் சாசன சட்டம்தான்.

ஆனால் இன்று அந்த அரசியல் சாசன சட்டத்திற்கே சனாதன சக்திகளால் பெரிதும் அச்சுறுத்தல் இருந்து வருகிறது. சானதனம் பெண்களின் வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும். அவர்களின் உரிமையை பறிக்கும். பெண்கள் இதுவரை பெற்ற வெற்றியை தக்க வைக்கவும், இழந்த உரிமைகளை திரும்ப பெறவும், ஒடுங்கிய குரல் ஓங்கி எழ சானதனத்தை எதிர்ப்போம், சமாதானத்தை போற்றுவோம், சமத்துவத்தை ஆதரிப்போம் என்று இந்த மகளிர் தினத்தில் உறுதியேற்போம்!

தொடர்புக்கு: 9551522933

# ஐ.சி.எப். தோழர் தி.இராஜேந்திரன் பணி ஓய்வு




ஐ.சி.எப். யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் ஏஐடியூசி யின் துணைத் தலைவர் தி.இராஜேந்திரன் கடந்த 2023 ஜனவரி மாதம் பணி ஓய்வு பெற்றார்.

விழாவில் சங்கத்தின் தலைவரும் ஏ.ஐ.டி.இ.சி. பொதுச்செயலாளருமான சி.ஸ்ரீகுமார் மற்றும் தமிழ்நாடு ஏஐடியூசி யின் மாநில பொதுச் செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், சி.சி.டி.யு. கன்வீனர் பாஸ்கர், பி.எஸ்.என்.எல். ஜெ.சி.எம். நடராஜன், மருத்துவர் சாந்தி உள்ளிட்ட ஐசிஎப் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஜனசக்தி வளர்ச்சிநிதியாக ரூ.2000 ஐ.சி.எப். தொழிற்சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

## பரமக்குடி பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

ஒன்பதாம் வகுப்பு பயின்று வரும் பள்ளி மாணவியை கடத்திச் சென்று, பாலியல் வன்புணர்வு தாக்குதல் நடத்திய சம்பவம் மிகவும் கொடூரமானது. இந்த இரக்கமற்ற மிருகச் செயலில் ஈடுபட்ட குற்றவாளி அரசியல் கட்சியின் பிரமுகர், உள்ளாட்சி பிரதிநிநி என்ற அடையாளத்துடனும், பணத்திமிருடன் நடந்து கொண்டுள்ளார். இது தொடர்பாக காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கை குறித்து உயர் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். ஒரு மாத காலம் ஒரு சிறுமி சித்திரவதை செய்யப்பட்டதில் இரண்டு பெண்களும் உடன் பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி, சமூக ஒழுக்கம் சீரழிந்து வருவதன் அடையாளமாகும். எதுவாகிலும் பரமக்குடி பள்ளி மாணவியை சீரழித்து, சிதைத்த குற்றவாளிகள் சட்டத்தின் சந்து, பொந்துகளில் தப்பித்துவிடாமல், கடுமையாக தண்டிக்கப்படும் வகையில் வழக்கை உறுதியாகவும், நேர்மையாகவும் நடத்த வேண்டும் என வலியுறுத்துவதுடன், பாதிக்கப்பட்ட பெண்ணின் கண்ணியமான வாழ்க்கைக்கு தேவையான உதவிகளை வழங்கி ஆதரிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஒன்றிய மோடி அரசின் சிலிண்டர் விலை உயர்வு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு (எல்பிஜி) சிலிண்டர், அதேப்போல் வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை மோடி அரசு மிகக் கடுமையாக உயர்த்தியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. வீட்டு பயன்பாட்டு எரிவாயு விலை சிலிண்டருக்கு 50 ரூபாயும், வணிக பயன்பாட்டு சிலிண்டர்களுக்கு ரூ.350 உயர்த்தியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. திரிபுரா, மேகாலயா, நாகலாந்து உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு முடியும் வரை காத்திருந்து விட்டு தேர்தல் முடிந்தவுடன் விலையை உயர்த்தியிருப்பது மோசடியான செயல் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு கண்டிக்கிறது.

சென்னையில் வீட்டு பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.1118.50 காசுகளும், உணவகங்கள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.2268/ஆக உயர்த்தியிருப்பது என்பது பொறுப்பற்ற நடவடிக்கை என்பதோடு, நடுத்தர, ஏழை மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது. ஒன்றிய அரசின் மிக மோசமான சிலிண்டர் விலை உயர்வை வன்மையாகக் கண்டிப்பதுடன் திரும்பப் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்தை மேலும் முடக்காதீர்!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

ஆன்லைன் சூதாட்டத்தில் பெருந்தொகையை இழந்து விட்ட சென்னை பெருநகர், கேகே நகரை சேர்ந்த சுரேஷ (40) என்பவர் தற்கொலை செய்துகொண்ட செய்தி வெளியாகியுள்ளது. இது போன்ற சாவுகள் தினசரி செய்தியாகி வருவது ஆளுநர் மாளிகையின் கண்ணை திறக்காதது மிகவும் வேதனையானது.

ஆன்லைன் சூதாட்டத்தின் விபரீத விளைவுகளை உணர்ந்த தமிழ்நாடு அரசு அவசர சட்டத்தின் மூலம் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்தது. இந்த அவசர சட்டத்தை நிரந்தர சட்டமாக்க, சட்டப் பேரவையில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆளுநர் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமாக பதில் அளிக்கப்பட்டது. அரசின் விளக்கம் பெற்ற ஆளுநர் மேலும் காலதாமதப்படுத்தி வருவது சூதாட்டத்தை ஊக்கப்படுத்தி, குடிமக்களின் உயிரோடு விளையாடும் செயலாகும். இதற்கிடையில் சூதாட்ட நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆளுநரை சந்தித்து கலந்துரையாடியது ஆழமான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆன்லைன் சூதாட்டத்தால் தினசரி குடிமக்கள் செத்து மடிவதை தடுக்க ஆளுநர் மாளிகை மக்கள் படும் துயரை கண்திறந்து பார்க்க வேண்டும், தமிழ்நாடு அரசின் சூதாட்டத் தடை சட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் தர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## வெளி மாநிலத் தொழிலாளர் எதிர்ப்பு விஷமத்தனத்தை முறியடிப்பீர்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாட்டின் பல பகுதிகளில், நாட்டின் பல மாநிலங்களிலிருந்து புலம் பெயர்ந்து வந்த தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இதே போல், நாட்டின் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாட்டு தொழிலாளர்கள் புலம்பெயர்ந்து சென்று, வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் அமைதி விரும்பாத, வெறுப்பு அரசியலை பரப்புரை செய்து, மோதல்களை உருவாக்கி, அரசியல் ஆதாயம் தேடும், மலிவான செயல்களில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக பிகார் மாநிலத்தில் இருந்து வந்துள்ள தொழிலாளர்கள் தாக்கப்படுவதாகவும், கொல்லப்படுவதாகவும் அடிப்படையும், ஆதாரமும் இல்லாத, அவதூறு செய்திகள் பரப்பப்படுகிறன்றன. இது சில ஊடகங்களிலும் முதன்மை செய்திகளாகிவிடுகின்றன.

இதன் விளைவாக, பிகார் மாநிலத்தில் தமிழ்நாட்டுக்கு எதிரான கருத்துக்கள் கட்டமைக்கப்படும் கயமைத்தனம் வெளிப்படுகின்றன.

அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வகுப்புவாத பாசிச சக்திகளின் ‘ஆக்டோபஸ்’ கரங்களிலிருந்து நாட்டை மீட்க, நாடு தழுவிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்ததிசைவழியில் தமிழ்நாட்டின் மாபெரும் வெற்றி கண்டிருக்கும் திமுகழக ஆட்சிக்கும், பாஜகவின் வஞ்சகத்தை உணர்ந்து, அந்தக் கட்சியை கூட்டணியில் இருந்து வெளியேற்றிய, பீகார் முதலமைச்சர் திரு.நித்தீஸ் குமார் ஆட்சிக்கும் நெருக்கடி ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் புலம் பெயர்ந்து வாழும் தொழிலாளர் தொடர்பாக வதந்திகள் பரப்புரை செய்யப்படுகின்றன. இதுபோன்ற சட்டவிரோத செயல்களை இரும்புகரம் கொண்டு, அடக்குவோம் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. “யாதும் ஊரே, யாவரும் கேளிர்”, “திரைகடலோடியும் திரவியம் தேடு” என்ற தமிழ் சமூகத்தின் தொன்மையான மரபை காத்து நிற்பதில், தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நின்று, சமூகவிரோத, சீர்குலைவு சக்திகளை முறியடிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஈரோடு கிழக்கு தொகுதியில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெற்றி

### வாக்களித்த மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆதரவு பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் வாழ்த்துகளை தெரி வித்துக் கொள்கிறது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து அஇஅதிமுக பாஜக கூட்டணி கட்சிகள் அவதூறுகளையும், பொய்களையும் அள்ளி வீசின.

இத்தேர்தல் வரவிருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கான முன்னோட்டம் என்றனர். அத்துடன் தேர்தல் தீர்ப்பு திமுக ஆட்சி மீதான தமிழக மக்களின் மதிப்பீடாக அமையும் என்றனர்.

பாஜக தலைவர்கள் ஜனநாயக வரம்புகள் மீறி பிரச்சாரங்களில் ஈடுபட்டனர். பதற்ற சூழலை உருவாக்கத் துடித்தனர். தேர்தலை ரத்து செய்ய கோரினர். மறுபுறத்தில் திமுக கூட்டணி, ஜனநாயக வடிவில் தேர்தல் வாக்குறுதிகளை முன்மொழிந்து தமிழக அரசின் திட்டங்களை வெளிப்படுத்தியது, அரசின் சாதனைகளை விளக்கியது.

அனைத்தையும் சீர்தூக்கிய ஈரோடு தொகுதி மக்கள் திமுக கூட்டணிக்கு வெற்றி தேடித் தந்ததோடு அஇஅதிமுக பாஜக சந்தர்ப்பவாத கூட்டணிக்கு தக்க பாடம் புகட்டியுள்ளனர். இது மகிழ்ச்சி அளிக்கிறது. வாக்களித்த மக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அஇஅதிமுக பாஜக கூட்டணி கட்சிகள் கூறியது போல் இத்தேர்தல் முடிவுகள் வரவிருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலின் முன் அறிவிப்பாகும் என்பதோடு தமிழக அரசின் மீதான நல்லதோர் மதிப்பீடாகும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

வாக்களித்த தொகுதி மக்களுக்கும், இடைவிடாமல் தேர்தல் பிரச்சாரங்களில் அயராது பாடுபட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணித் தோழர்களுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# போக்குவரத்து கழகத்திற்கு வாடகைப் பேருந்துகள் எடுக்காதீர்!

### ஏஐடியுசி வேண்டுகோள்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் தொழிலாளர் ஏஐடியுசி சம்மேளன பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாநகர போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான வழித்தடங்களில் 500 தனியார் பேருந்துகள் மூலம் இயக்கப்பட உள்ளதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

தனியார் பேருந்துகள் லாப நோக்கத்தில் மட்டுமே இயக்கப்பட்டு வந்ததால்தான், தனியார் பேருந்துகள் தேசியமயமாக்கப்பட்டு அரசு போக்குவரத்து துறையாக இருந்து, பின்னர் 1973ல் கலைஞர் ஆட்சியில் அரசு போக்குவரத்து கழகங்களாக மாற்றப்பட்டன.

239 பேருந்துகளுடன் தொடங்கப்பட்ட அரசு போக்குவரத்து கழகங்கள், தற்போது சென்னை மாநகர பேருந்துகள் 3400, இதர மாவட்டங்களில் 6600 நகர பேருந்துகள், 7800 புறநகர் பேருந்துகள், 500 மலைப்பகுதி பேருந்துகள் 350 பணிமனைகள் என பெரும் வளர்ச்சி பெற்றுள்ளன.

ஈட்டிய லாபம் அனைத்தும் பெரு மதிப்புக்குரிய சொத்துக்களாகி அரசிடம் இருக்கின்றன. அதிக பணிமனைகள், அதிக பேருந்து நிலையங்கள் காரணமாக போக்குவரத்து வசதியும் பெருகி உள்ளது.

2013 முதல் 2023 வரை 10 ஆண்டுகளாக மாநகரப் போக்குவரத்து கழகத்தில் புதிதாக யாரும் பணி நியமனம் செய்யப்படவில்லை. பணி ஓய்வு இறப்பு மற்றும் வேறு காரணங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. பேருந்துகள் இயக்குவதற்கு ஓட்டுனர் நடத்துனர், தொழில்நுட்ப ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திடம் 3400 பேருந்துகள் இருந்தும் 2400 பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகின்றன. ஆயிரம் பேருந்துகள் பயன்பாட்டில் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்குக் கூட போதிய பணியாளர்கள் இல்லாததால், சட்டப்படி கிடைக்க வேண்டிய வார ஓய்வு, விடுப்புகளைக் கூட தொழிலாளர்களுக்கு வழங்குவதில்லை. கூடுதல் பணி தொடர்ந்து பார்க்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதனையும் பொறுத்து தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இயக்கப்படாமல் இருக்கும் ஆயிரம் பேருந்துகளை, போதுமான தொழிலாளர்களை பணிநியமனம் செய்து இயக்குவதற்கு பதிலாக, தனியாரிடம் பேருந்துகளை வாடகைக்கு அமர்த்துவது பொறுப்பற்ற செயலாகும்.

இதனால் அரசுப் பேருந்துகள் ஈட்டுகிற வருவாயை, தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு வாடகையாகக் கொடுத்து போக்குவரத்து கழகத்தை மேலும் நஷ்டம் அடையவே வழிவகுக்கும். மேலும் கைவசம் உள்ள ஆயிரம் பேருந்துகள் இயக்கப்படாமலும் பராமரிப்பு இல்லாமலும் சீர்கெடும் நிலையும் உருவாகும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு வகைகளில் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பிடித்து பல விருதுகளை பெற்றுள்ளன. மற்ற மாநிலங்களை காட்டிலும், மக்களின் பயணத் தேவைகளை பெருமளவு நிறைவு செய்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்தப் பெருமிதத்திற்குரிய பயண சேவை தனியார்மயத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டு சீர்குலையும்.

கலைஞர் அரசு, பொருள் அடர்த்தியோடு சிந்தித்து உருவாக்கிய பொதுத்துறை போக்குவரத்தை, மீண்டும் தனியாரிடம் ஒப்படைப்பது எவ்வகையிலும் நியாயமற்றதாகும்.

தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து, போக்குவரத்து கழக பேருந்துகளையும், பொதுத்துறை பயண வசதிகளையும் முடமாக்குகிற தீமை நிறைந்த கொள்கை முடிவை ஏஐடியூசி கண்டனம் செய்கிறது. இதனை தமிழ்நாடு அரசு தலையிட்டு கைவிடச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறது

ஓட்டுநர், நடத்துநர், தொழில் நுட்பப் பிரிவுகளில் உள்ள காலி பணியிடங்கள் பூர்த்தி செய்து, நிறுத்தி வைக்கப்பட்டு அல்ல பேருந்துகளை இயக்கி பயன்களுக்கு போதிய வகையில் பயண வசதியை நிறைவு செய்யுமாறு தமிழ்நாடு அரசை ஏஐடியுசி வலியுறுத்துகிறது.

# ரஷ்ய – உக்ரைன் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு

## அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாநாடு தீர்மானம்

அகிலஇந்தியசமாதானஒருமைப்பாட்டுக் கழகத்தின் அகில இந்திய மாநாடு பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் மார்ச் 4 மற்றும் 5 தேதிகளில் நடைபெற்றது.

“அரசியல் சட்டத்தின் மாண்புகளை காத்தல், உலக சமாதானத்தை பாதுகாத்தல், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒருமைபாட்டை வலுப்படுத்தல்” என்ற முழக்கங்களோடு இம்மாநாடு நடைபெற்றது.

மாநாட்டிற்கு யாதவ ரெட்டி, சுனிதா சதுர்வேதி, சி.பி.நாராயணா, டாக்டர் சுதாகர் தலைமைக் குழுவாக இருந்து செயல்பட்டனர். ஹர்சந்த் சிங் வரவேற்புரையாற்றினார்.

மாநாட்டை ஆர்.எஸ்.சீமா துவக்கிவைத்து உரையாற்றினார்.

உலக சமாதானக் கவுன்சிலின் தலைவர் பல்லப்சென் குப்தா மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினார்.

உலக சமாதானக் கவுன்சிலின் நிர்வாகச் செயலாளர் இராக்கிலிஸ் சவ்தூரிதிஸ், கியூபா பிரதிநிதி விக்டர், வியட்நாமைச் சேர்ந்த லாயிட், இலங்கையைச் சேர்ந்த புத்திகா, நேபாளத்தைச் சேர்ந்த ரவீந்திர அதிகாரி, வங்கதேசத்தைச் சேர்ந்த முஜிபூர் ஹுசைன் பல்து, ஆஸ்திரேலியாவைச் சேர்த்த ஹத்தேஷ் கல்பேஷ் , அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஹாவெந்தர் காங் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பாலஸ்தீன பிரதிநிதி அக்கியுயல் காணொளி வாயிலாக வாழ்த்துரை வழங்கினார்.

ஐப்சோவின் பொதுச் செயலாளர் பல்லப்சென் குப்தா முன்வைத்த




வேலை அறிக்கை, பொதுச்செயலாளர் அருண்குமார் முன்வைத்த அரசியல் அறிக்கையின் மீதான விவாதத்தில், 21 மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து மாநில துணைத் தலைவர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ,மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.மிருதுளா ஆகியோர் விவாதத்தில் பங்கேற்று பேசினர்.

விவாதங்களுக்குப் பிறகு அறிக்கை ஏகமனதாக ஏற்கப்பட்டது.

“பஞ்சாப் நேற்று இன்று நாளை” என்ற தலைப்பில் 4.03.2023 அன்று மாலை கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் பஞ்சாப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் அரவிந்த்,குருநானக் பல்கலைக் கழகத்தின் ஒய்வு பெற்ற பேராசிரியர் ஜக்ரூப் சிங் ஷெக்கான், பட்டியாலா வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அமர்ஜித் சிங் சித்து, பேராசிரியர் சீமா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

ஐப்சோவின் கடமைகள் நோக்கங்கள் குறித்த சண்டிகர் பிரகடனம் ஏகமனதாக ஏற்கப்பட்டது.

இம்மாநாட்டில் 250 க்கும் மேற்பட்ட பிரதி நிதிகள் பங்கேற்றனர். தமிழ்நாட்டிலிருந்து 24 பிரதிநிதிகளும், 3 பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

4 மற்றும் 5 ஆம் தேதி மாலை கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மாநாட்டில் 133 பேர் கொண்ட தேசிய பொதுக் குழுவும் 51 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் 21 புதிய நிர்வாகிகளும், 10 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை தேவைக்கு ஏற்ப அதிகரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பல்லப் சென்குப்தா, நிலோபர் பாசு, யாதவ் ரெட்டி ஆகியோர் அடங்கிய தலைமைக் குழுவும், ஹர்சந் சிங் மற்றும் அருண்குமார் அடங்கிய மூன்று பொதுச் செயலாளர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து, டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், பி.செந்தில்குமார், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, சி.பாலச்சந்திரன், ஆர்.மணிமோகன், ஏ.ஆறுமுகநயினார், கே.சி.கோபிக்குமார், டி.செந்தில் குமார், ஆர்.ராஜேந்திரன், எஸ்.மிருதுளா ஆகிய 10 பேர் பொதுக்குழுவுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், ஏ.ஆறுமுகநயினார், டாக்டர் பி.செந்தில்குமார், டாக்டர் ஏ.ஆர். சாந்தி, சி.பாலச்சந்திரன், கே.சி.கோபிக் குமார், டி.செந்தில் குமார் ஆகிய 7 பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

அகில இந்திய துணைத்தலைவராக டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், இணைச் செயலாளராக ஏ.ஆறுமுகநயினார் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கியூபா ஆதரவு ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவது, பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவு இயக்கங்களை அதிகப்படுத்துவது, ரஷ்ய – உக்ரைன் போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருவது, ரஷ்ய – உக்ரைன் பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு காண்பது, நேட்டோ உள்ளிட்ட அனைத்து ராணுவக் கூட்டணிகளும் கலைக்கப்பட வேண்டும்,இந்திய அரசியல் சட்டத்தின் மாண்புகள் காக்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 2023–2024 ஆம் ஆண்டுக்கான

# தமிழக அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கை

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் முன் மொழிவு

தமிழ்நாடு அரசு கூட்டிய 2023–2024 ஆம் ஆண்டு வேளாண் நிதி நிலை அறிக்கைக்கான முன்மொழிவு கருத்து கேட்புகூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் வேளாண் துறை அமைச்சர், கூட்டுறவுதுறை அமைச்சர்,கால்நடைத்துறை அமைச்சர் மற்றும் உயர்நிலை அலுவலர்கள், விவசாய சங்க தலைவர்கள், வேளாண் தொழில் முனைவோர்கள் கொண்ட கூட்டுக் கூட்டம் மார்ச் 5 அன்று நடந்தது.

இதில்தமிழ்நாடுவிவசாயிகள்சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.குணசேகரன் முன்.எம்.எல்.ஏ., பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் பங்குகொண்டு சங்கத்தின் சார்பில் முன்மொழிவுகளை பேசி கீழ்க்கண்ட மனுவை கொடுத்தனர்.

நாடு தழுவிய விவசாயிகளின் 13 மாத கால போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்த ஒன்றிய அரசு விவசாயிகளிடம் ஒப் புதல் அளித்தபடி, குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் அரசு உத்தரவாத கொள்முதல் ஆகியவற்றை ஒன்றிய அரசுஉடன்நிறைவேற்றிட வலியுறுத்தி தமிழக அரசு சட்டமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றிட வேண்டுகிறோம்.

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023ஐ வரவேற்று சிறுதானிய பயன்பாட்டில் தமிழகம் சிறப்பு நிலை அடைய சிறு தானிய உற்பத்தி பரப்பளவுமற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்க சிறப்பு திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டும்.

செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் அறிவுறுத்தலை நுகர்வோர்களின் கருத்தறியாது, உரிய அறிவார்ந்த ஆய்வறியாது ஒன்றிய அரசு அமல்படுத்தி வருவதை நிறுத்தி ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்கிடும் நமது பாரம்பரிய அரிசி, சிறுதானியங்கள், காய்கறிகள் இங்கு மிகுதியாக உள்ளதை பொது விநியோக அங்காடிகளில் விற்பனை செய்திடும் தொலைநோக்கு சிறப்பு திட்டத்தை உடன்நடைமுறைப்படுத்திட வேண்டும்.

ஒரு காலத்தில் வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட இடுபொருட்கள் தற்பொழுது 90சதம்அளவுதனியார் கடைகளில் வாங்கிக் கொள்ள வேண்டிய நிலையில் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளதால், விவசாயிகள் விரும்பாத பொருட்களையும், கட்டுப்பாடற்ற விலை கொடுத்து வாங்க வேண்டிய இன்னல் உள்ளது. எனவே வேளாண்மை தேவைக்கான விதைகள், உரம், பூச்சி மருந்துகள் உள்ளிட்ட இடுபொருட்களை வேளாண் வணிகத்துறையை பயன்படுத்தி கூட்டுறவு துறை மூலம் கிராமவேளாண்கூட்டுறவுசங்கங்கள் மற்றும் வேளாண் விற்பனை கிடங்குகளில் விற்பனை செய்திட தனித்த திட்டம் வேண்டும்.

வெப்பமய உயர்வால், காற்று மாசால் வருடம் தவறாது எதிர்பாராஇயற்கை பாதிப்புஏற்பட்டு, விவசாயிகளின் வேளாண் உற்பத்தி, நுகர்வோர்களுக்கான உணவு தேவைகள் பாதிப்பு அடைகின்றன. எனவே ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் வரன்முறை நிபந்தனைகளில், தற்போதைய வேளாண் உற்பத்தி செலவுக்கு ஏற்ப நிவாரணத் தொகையை கூடுதலாக்கிட ஒன்றிய அரசிடம் வலியுறுத்திட வேண்டும்.

அதுவரை தமிழக அரசு இதற்கான வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை நிரந்தர திட்ட நிவாரண நிதியாக ஒதுக்கீடு செய்திட வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரும் பகுதியாக விளையும் வேளாண்விளை பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக தரம் உயர்த்தி, விற்பனை செய்து விவசாயிகளின் லாபத்தை பெருக்கிடும் நிலையில் புத்தாக்க தொழில்களை உருவாக்கிடவும், ஏற்றுமதிக்கான மண்டலங்களை உருவாக்கிடவும் வேண்டும்.

தனியார் பங்கேற்பு வேளாண் காப்பீடு திட்டம் என்பது பேரிடர் பாதிப்பிற்கேற்ப விவசாயிகளுக்கு உதவிட வில்லை என்பதால் தான் சில மாநில அரசுகள் தனியாரை கைவிட்டுள்ளன. பெரும்பகுதி அரசின் நிதியை பெற்று சிறுபகுதி மட்டுமே விவசாயிகளுக்கு வழங்குகிறது. எனவே பெரும்பரப்பளவில் தமிழகத்தில் விளையும் நெற்பயிருக்கு மட்டுமாவது தமிழக அரசே தனி சிறப்பு காப்பீடு திட்டத்தை ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்திட வேண்டும்.

மரபு வழிவந்த நெல் விதைகளின் மூலக்கூறு சிதையாமல், இயற்கை சாகுபடி முறையில் இவ் விதைகளின் உற்பத்தி திறனை உயர்த்திடும் நிலையில், புதிய விதைகளை உருவாக்கிட ஆய்வு திட்டம் வேண்டும்.

ரசாயன உரங்களுக்கு வழங்கும் மானியத்தொகை அளவு, முழு இயற்கை சாகுபடி செய்யும்விவசாயிகளுக்கும்வழங்கி ஊக்கப்படுத்திட வேண்டும்.

பசுமைக்குடில் மற்றும் ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் தானியம், பூக்கள், காய்கறி விளைச்சலை அதிகரிக்கவும், கால்நடை தீவன தேவையை பெருக்கிடவும், வாய்ப்புள்ள மாவட்டங்களில் சிறப்பு திட்டம் வேண்டும். இதை AKS விக்யான் கேந்திராவுடன் இணைத்திட வேண்டும்.

ஆறு, ஏரி, கண்மாய், அணைக்கட்டு பாசனம் பெறும் மாவட்டங்களில் நீர் பங்கீடு, பராமரிப்பு, தூர்வாருதல் போன்றவைகளை திறம்பட நிர்வகித்திட வருவாய் கிராமங்கள் தோறும் கிராம வேளாண்மை பாதுகாப்பு குழு அமைத்திட வேண்டும். இக்குழுவில் விவசாயிகள் சிலருடன் வருவாய் வட்ட அளவிலான நீர்வளத்துறை, வருவாய்த்துறை, வேளாண் துறை அலுவலர் ஒருவரை இடம்பெற செய்திட வேண்டும்.

இக்குழு கிராம நில அளவின் அடிப்படையில் விவசாயிகளின் பங்குத் தொகையுடன் அரசின் ஒதுக்கீட்டு நிதியையும் சேர்த்து நீர்ப்பாசன வடிகால்களை தூர்வாரி மேம்படுத்திட செய்வது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தூர்வாருதல் நிவாரணம் வழங்குவதற்கான அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடுகுறையும் மற்றும் நிதி விரயம் தடுக்கப்படும். மேலும் இக்குழு மூலமாக கிராம அளவிலான பயிர்தேர்வு, வளர்ப்பு, விற்பனையை ஒருமுகப்படுத்தி விவசாயிகள் லாபம் பெற செய்திடலாம்.

தேர்தல் கால அறிவிப்பை உறுதியாக நம்பி இதுவரை எதிர்பார்ப்போடு இருக்கிற விவசாயிகளிடம் நெல் குவிண்டால் ரூபாய் 2500, கரும்புடன் ரூ.4000 விலைநிர்ணயம் செய்து கொள்முதல் செய்திட வேண்டும்.

நெல் சாகுபடிக்கு அடுத்த நிலையில் உள்ள கரும்பு சாகுபடி பரப்பளவு குறையாமல் தடுத்திட, முடங்கி செயலற்று இருக்கிற சர்க்கரை ஆலைகளை செயல்படுத்துவதற்கு தனிக்குழு அமைக்க வேண்டும். விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை வழங்கிட, பெறாத கடனால்நெருக்கடிக்குள்ளான விவசாயிகளை இதிலிருந்து விடுபட செய்திட வேண்டும்.

உயர்ந்து வரும் தென்னை சாகுபடியைபாதுகாத்திட, தென்னை உபபொருட்கள்தயாரிப்பு உள்ளிட்ட தென்னை வணிக வாரியம் அமைத்திட வேண்டும்.

பால் மற்றும் மீன்வளர்ப்பு விவசாயிகளின் பிரசினைகளுக்கு தீர்வு கண்டிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## அறிவிப்பு

தோழர்களே, 2023 மார்ச் 1ஆம் தேதி முதல் ஜனசக்தி சந்தா முடிவடைபவர்களுக்கு சந்தாவை புதுப்பிக்கும் வகையில் நினைவூட்டு தபால் காா்டு அனுப்பப்படுகிறது.

முடிவடையும் சந்தாதாரர்கள் ரூபாய் 750 செலுத்தி ஜனசக்தி சந்தாவை புதுப்பிக்க வேண்டுகிறோம்.

ஜனசக்தியின் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பும் தோழர்கள் பணம் அனுப்பியதற்கான செலான் அல்லது அதற்குரியவிவரங்களைஜனசக்தியின் ஈமெயில் அல்லது whatsappக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**நிர்வாகம், ஜனசக்தி**

# அரசாணைகள் 152, 139 மற்றும் 10 ஆகியவற்றை ரத்து செய்திடுக!

## ஏஐடியுசி உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்




தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணைகள் 152, 139 மற்றும் 10 ஆகியவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும்,

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட அரசு துறை மற்றும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களின் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்து வரும் அனைத்து ஒப்பந்த மற்றும் தற்காலிக பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரியும்,

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளின் ஒப்பந்தம் வெளிச்சந்தை, தினக்கூலி, சுய உதவி குழு போன்ற முறைகளை முற்றாக கைவிட வலியுறுத்தியும்,

இங்கு பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் பணி ஊதியம், ஓய்வூதியம் போன்ற கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியை அமுலாக்கக் கோரியும்,

கொரோனா நிவாரண நிதி ஏற்றுக் கொண்டவாறு உடனே வழங்கக் கோரியும்,

பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றக் கோரியும்,

தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.21,000 ம் உயர்த்தி வழங்க கோரியும்,

ஓய்வு பெற்றவர், இறந்தவர் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பக் கோரியும்,

70 ஆண்டுகளுக்கு மேலாக கிராம ஊராட்சி தொழிலாளர்களை பகுதி நேர ஊழியர்கள் என்று வஞ்சிப்பதை கை விட்டு, முழு நேரப் பணியாளர்களாக அறிவித்து கோவா மாநில அரசைப் போல் பணி நிரந்தரம் செய்து, 7 வது ஊதிய குழுவின் கடைநிலை ஊழியருக்கான ஊதியம் உள்ளிட்ட உரிமைகளை நிலை நாட்ட வலியுறுத்தியும்,

ஏஐடியுசி உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மார்ச் 2 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஜெயங்கொண்டம் – அரியலூர்:** ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகம் முன்பு ஏஐடியுசி சுகாதாரத் தொழிலாளர் சங்க துணை தலைவர் ம.சிலம்பு செல்வி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார். மற்றும் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் ஜி.தண்டபாணி, சிபிஐ மாவட்ட செயலாளர் சொ.இராமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாவட்டத் தலைநகர் அரியலூரில் அண்ணா சிலை அருகில் மாலை 5மணிக்கு 100க்கும் மேற்பட்ட உள்ளாட்சித் தொழிலாளர்கள் கலந்து கொண்டு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் மா.இராதாகிருஷ்ணன், மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி, திருமானூர் ஆறுமுகம், அரியலூர் நகராட்சி ரெ.நல்லுசாமி, கு.சிவஞானம், செ.மாரியப்பன், ஊராட்சி மருதமுத்து, சி.பன்னீர்செல்வம், தூய்மைக் காவலர் கு.வனிதா, கட்டுமானம் ஜீவா, வால்பாறை மாணிக்கம் ஆர்.தனசிங், தெரு வியாபாரம் எஸ்.முரளிகிருஷ்ணன் உட்பட திரளாக கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி தலைவர் வி.இராமானுஜம் தலைமை வகித்தார். ஏஐடியுசி துணை தலைவர் ஏ.வீரராகவன் முன்னிலை வகித்தார். ஏஐடியுசி மாநில தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், சிபிஐ மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன், ஏஐடியுசி மாவட்ட பொது செயலாளர் எஸ். மயில்வாகனன், சிபிஐ வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் வி.இ.ராஜீவ் காந்தி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர். பி.ரவி நன்றி கூறினார்.

**கோவை:** கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற போராட்டத்திற்கு தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. செயலாளர் என்.செல்வராஜ் தலைமை தாங்கினார். கோவை மாவட்ட தூய்மை பணியாளர்கள் உரிமை மீட்பு கூட்டு இயக்கம் சார்பில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கோயமுத்தூர் லேபர் யூனியன் பொதுச் செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் சுகாதார துப்புரவு மற்றும் பொதுப்பணியாளர் சங்கம் பொதுச் செயலாளர் இரா. தமிழ்நாடு செல்வம், தமிழ்நாடு நம்மவர் தூய்மை பணியாளர் தொழிற்சங்க பேரவை செயலாளர் பி.எஸ். மணிகொடி, கோவை மாவட்ட டாக்டர் அம்பேத்கர் மக்கள் துப்புரவு மற்றும் பணியாளர் சங்கம் பொதுச் செயலாளர் ஏ.சி. ஆறுமுகம் மற்றும் பெரும் திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**கன்னியாகுமரி:** பூதப்பாண்டி பேரூராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு பி.நாகராஜன் தலைமை வகித்தார். எம்.லீலா, சுசீலா, ராமசந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏ.ஐ.டி.யு.சி.யின் மாவட்டச் செயலாளர் ஜி.சுரேஷ்மேசியதாஸ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் எஸ்.இசக்கிமுத்து, பொருளாளர் ஆர்.கே.சிரிகுமார், சிபிஐ மாவட்ட துணை செயலாளர் எஸ்.நாராயணசாமி, மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.ராஜீ, சிபிஐ நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, மின்வாரிய ஏ.ஐ.டி.யு.சி.பொறுப்பாளர் ஆர்.சிவகுமார், சிபிஐ தோவாளை தாலுகா செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம், ஆகியோர் கருத்துரை ஆற்றினர். சிபிஐ குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் போராட்ட கோரிக்கை குறித்து விளக்கி பேசினார். ஏ.ஐ.டி.யு.சி.மாவட்டத்தலைவர் எஸ்.அனில்குமார் போராட்டத்தை முடித்து வைத்தார். பெருந்திரளான தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலகம் முன்பு சரவணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி தலைவரிடம் கொடுக்கப்பட்டது.

**தாம்பரம்:** செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட செம்பாக்கத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு செம்பாக்கம் சங்கத் தலைவர் கே.ஏழுமலை தலைமை வகித்தார். ஏஐடியுசி மாநில துணைத்தலைவர் எம்.சங்கைய்யா, மாநில குழு உறுப்பினர் பி.ரவிச்சந்திரன், சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர்.தேவராஜன், தமிழ்நாடு ஏஐடியூசி மீனவர் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் க.ஜெகதீசன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். 56 பெண்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சுப்ரமணியன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் த.இந்திரஜித், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், மாநகர் மாவட்ட செயலாளர் சிவா, புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட பெருளாளர் ராமராஜ், மாவட்ட துணைத் தலைவர் ஜனசக்தி உசேன், மாவட்ட துணைச் செயலாளர் முருகன், மாநகர் செயலாளர் சந்திரபிரகாஷ் ஆகியோர் கண்டன உரை நிகழ்தினர்.

**தஞ்சை:** தஞ்சை மாநகராட்சி ஆணையர் க. சரவணகுமாரிடம் தஞ்சை மாவட்ட ஏஐடியூசி சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதில் தஞ்சை மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் ஆர். தில்லைவனம் தலைமையில், தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட செயலாளர் துரை.மதிவாணன் நிர்வாகிகள் எஸ்.சுதா, கே.கல்யாணி, எம்.பாலமுருகன், தா.அயூப்கான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கொண்டம்மா மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டம் ஆர்.கே. நகர் தொகுதி 47வது வட்டத்தில் உள்ள முன்னணி தோழர்களில் ஒருவரான பாபு அவர்களின் தாயார் கொண்டம்மா (வயது 72) மார்ச் 05 அன்று இயற்கை எய்தினார். அவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, வட சென்னை மாவட்ட துணை செயலாளர் ஜீ.சுப்ரமணி மற்றும் தோழர்கள் மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு பாராட்டு விழா



ஆனந்த விகடன் இதழ் வழங்கிய “2022 ம் ஆண்டின் “டாப் டென் மனிதர்கள்“ விருது மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் அவர்களுக்கு வழங்கப்பட்டதற்கு கோவையில் பாராட்டு விழா மார்ச் 6 அன்று கோவை அண்ணாமலை அரங்த்தில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி நினைவுப்பரிசினை வழங்கி சிறப்புரையாற்றினார்.

## மின்வாரிய உத்தரவை திரும்பப் பெறுக!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாடு மின்சார வாரியம், ஒரு வளாகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின் இணைப்புப் பெற்றுள்ளவர்கள், அவைகளை திருத்தி ஒரே மின் இணைப்புக்கு கொண்டு வர வேண்டும் என அறிவிப்பு வழங்கி வருகிறது. இது மின் நுகர்வோர் மீது செலவுச் சுமையை ஏற்றும் தாக்குதலாகும்.

தமிழ்நாடு அரசின் மின் வழங்கல் கொள்கையின் படி, தற்போது மின்நுகர்வோர் மானியம் உள்ளடங்கிய கட்டணம் செலுத்தி வருகிறார்கள். அதாவது வீடுகள், கைத்தறி, விசைத்தறி நெசவுக் கூடங்கள் முறையே 100, மற்றும் 300 யுனிட் மின்சாரம் கட்டணச் சலுகை பெற்று வருகிறார்கள். மின்வாரியத்தின் உத்தரவு இந்த மின்கட்டணச் சலுகையை அடியோடு பறிக்கும் நோக்கம் கொண்டது. இனி வரும் காலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின் இணைப்புக் கொண்ட வளாகம், ஒரே மின் இணைப்புக்கு மாறும் போது, அதற்கான கட்டணம் 1 டி விகிதப்படி அதாவது ஒரு யுனிட்டுக்கு தலா ரூபாய் 8 வீதம் வசூலிக்கப்படும் என்பதையும் மின்வாரியம் தெளிவுபடுத்தியுள்ளது.

மின்கட்டணம், மீட்டர் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மின் இணைப்புகளை திருத்தி அமைக்கிறோம் என்ற பெயரில் மின் நுகர்வோர் நலனுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதலாகும். தமிழ்நாடு அரசின் மின் வழங்கல் கொள்கைக்கு எதிரானது என்பதை சுட்டிக் காட்டுகிறது. மின்வாரியத்தின் இந்த அறிவிப்பை தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட்டு ரத்து செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஏ.ஐ.டி.யு.சி. ஆட்டோ தொழிலாளர் சங்க பெயர் பலகை திறப்பு விழா

அரியலூரை யொட்டியுள்ள எருத்துக்காரன்பட்டி ஊராட்சியில் அடங்கிய குரும்பஞ்சாவடி ரவுண்டானா சாலையின் வடபுறம் ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர் சங்கம், குரும்பஞ்சாவடி கிளை சங்கப் பெயர் பலகையை வால்பாறை மாணிக்கம் திறந்து வைத்தார்.

ஏஐடியுசி கொடியை ஏஐடியுசி அரியலூர் மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் சிபிஐ நகர கிளை ந.கோவிந்தசாமி, எருத்துக்காரன்பட்டி ஊராட்சி குடிநீர் பம்பு ஆப்ரேட்டர் ஆர். மருதமுத்து, துப்புரவு பணியாளர் துரைராஜ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 109. எப்போ படிங்க

**எளிதில் படிப்பேற எப்போ படிக்க**
**துடிக்குங்கால் தூக்கிப் படி.**


படிக்கும் கருத்துக்கள் நெஞ்சில் ஆழமாகப் பதிய வேண்டுமானால் எப்பொழுது படிக்க வேண்டும்? படிக்க வேண்டும் என்ற துடிப்பு எப்போது ஏற்படுகிறதோ அப்போது படிக்க வேண்டும். (சலிப்பான நேரத்தில் படித்தால் படியாது)

**அரிய அறிய கருதிப்படி யற்க**
**புரிய புரியப் படி**

அரிய நூல்களையே படிக்க வேண்டும் என எண்ணி, புரியாதவற்றைப் படிப்பதில் பயன் இல்லை. எது புரிகிறதோ அதனை, புரிந்து கொண்டு மேலே படித்துச் செல்ல வேண்டும்.

# நூல் நயம்

## மனிதி




சங்ககாலம் முதல் பெண்கள் கடவுளாகவும் போற்றப்படுகிறார்கள், அடிமைகளாகவும் நடத்தப்படுகிறார்கள். வேலு நாச்சியார், ஜான்சி ராணி போன்ற பெண்கள் வாழ்ந்த இம்மண்ணிலே. ஆஷிபா, நிர்பயா போன்ற பெண் குழந்தைகள் கற்பழிக்கப்படுவது பெரும் அவலமன்றோ!.

பெண்களின் பாடுகளையும், பெருமைகளையும் பேசுகிறது சுதா போஸ் எழுதிய மனிதி என்னும் இன்நூல். பதினாறு வயது நிரம்பிய ஒரு குழந்தை தன் 'வெளி'யை எப்படி உணருகிறது என்பதன் சான்று இப்பதிவு. சமூக சுற்றத்திலிருந்துதான் கற்க தொடங்குகிறது குழந்தை. தான் கண்டு, கேட்டு, உணர்ந்தவற்றை பொது சமூகத்திடம் முன்னுறுத்தி பேசுகிறது. பெண் பிறப்பில் தொடங்கி கல்வி, பணி, குடும்பம், சமுதாய நிலை என அனைத்திலும் கருத்து நிலை, மரபுசாத்திரங்கள், வல்லாதிக்கம், அறியாமை ஆகியவற்றால் பெண் எப்படி துன்புறுகிறாள் என்பதை சின்ன சின்ன தலைப்புகளில் எழுதி உள்ளது சிறப்பு.


இந்த காலத்தில் வீட்டிற்குள்ளேயே நடக்கும் பாராபட்சம், ஒவ்வொரு துறையிலும் பரவ, ஒவ்வொரு நாளும் ஒரு பெண் குறையாடப்படுகிறாள். பாலியல் வன்முறைக்கு அந்த பெண் அணிந்திருக்கும் அந்த ஆடை தான் காரணம் என்று நம்பிக் கொண்டிருக்கும் சில நல்லவர்கள். கல்விக்காக போராடும் பெண்கள் என்ற காலம் மாறிப்போய், கற்பை பாதுகாக்க போராடும் பெண்கள் வாழும் காலமென இந்த காலம் மாறிப் போய் உள்ளது. பெண்களின் அன்பு மட்டும் அல்ல, அவர்களின் திறமையும் கடலினும் பெரிது. பெண்களின் திறமையை நன்றாக பயன்படுத்திக் கொள்ளும் நாடுகளே, நன்கு வளர்ந்த நாடுகளாக திகழ்கின்றன. பெண்கள் சுதந்திரம் வேண்டும் என்று யாரிடமும் கெஞ்சிநிற்க வேண்டியதில்லை. ஏனென்றால் சுதந்திரம் என்பது யாரிடமும் அடகு வைக்கும் பொருளல்ல. எனவே, நமது சுதந்திரத்தை நாமே தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என பெண்களுக்கு ஊக்கமூட்டுகிறார் நூலாசிரியர்.

கருவிலே கொல்ல நினைப்பவர்களை கடந்து வந்து, ஆடையை வைத்து அடக்க நினைப்பவர்களை அடிபணிய வைத்து, பதுமையாக பாவிப்பவர்களை விட்டு பறந்து சென்று, சாபம் என்று கூறுபவர்களை உன் இரு கால்களிலும் சரணடையச் செய்து வெற்றி பெறுவாய் என பெண்களை ஊக்கப்படுத்துகிறார் நூல் ஆசிரியர் சுகா.மனிதி அனைவரும் வாங்கி படிக்க வேண்டிய நூல். வாங்கி படியுங்கள்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : சுகா போஸ் | |
| பக்கம் | : 40 | விலை : 60 |
| வெளியீடு | : பாவை பப்ளிகேஷன்ஸ் 16 ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை –14 | |

## சுற்றுச்சூழல் கட்டுரைகள்




உலகத்தை பெரிதும் அச்சுறுத்தும் காரணிகளில், இன்றைக்கு சுற்றுச்சூழலும் பெரும் காரணியாக உள்ளது. உருகும் பணி, உயரம் கடல் மட்டம், கொட்டும் மழை, கொதிக்கும் வெயில், குமுரும் பூமி என உலகம் பல்வேறு கால நிலை மாற்றங்களால் மாறி மாறி அல்லல் படுகிறது. இவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என மனிதகுலம் திகைத்து நிற்கிறது. எனவே, இது குறித்து தனது பார்வையை சுற்றுச்சூழல் கட்டுரைகள் எனும் இன் நூலில் முன் வைத்துள்ளார் சுப்ரபாதிமணியன்.

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் சீரழிவு பற்றிய கரிசனம் உருவாகவில்லை. அதற்கு ஒரு காரணம். தமிழில் இந்த பொருள் சார்ந்த நூல்கள் மிகவும் குறைவு. ஆகையால்தான் மக்கள் சார்ந்த இயக்கமொன்று பெரிதாக உருவாகவில்லை. அதனால்தான் இந்த நூல் முக்கியத்துவம் பெறுகிறது.

உலகத்தின் நுரையீரல் என்று அழைக்கப்படும் அமேசான் காடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன. வளர்ச்சிப் பணிகளுக்காக பிரேசில் 10 ஆண்டுகளுக்குள் காடு அழிப்பு முடிவுக்கு கொண்டுவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளது. ஆனால், இதன் பின்னால் உள்ள செயல் திட்டங்கள் ஏமாற்றம் தருகின்றன. பல்வேறு புதிய நோய்க்கிருமிகளும், அழிவுகளும் மனித குலத்தை கவலையோடு பார்க்க செய்கிறது.

புவி வெப்பமயமாதல் தொடர்ந்து அதிகரித்தால் ,கடந்த நூற்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த பேரிடர்கள். இனிமேல் சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் நிகழும் என்பது எச்சரிக்கையாக இருக்கிறது. இவற்றை கட்டுப்படுத்தாவிட்டால் என்னவாகும். இந்தியாவில் சுமார் 20 கோடி மக்கள் நீரின்றி தவிப்பார்கள். இமயமலை உருகி பல பகுதிகளில் காணாமல் போகும். பல புதிய தொற்று நோய்கள் உருவாகும். மக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டால் தவிப்பார்கள். மழையின்றி வேளாண்மை அழியும். 100 கோடி மக்கள் பட்டினியால் மடிவார்கள். பல நகரங்கள் கடலுக்கு அடியில் போய்விடும். இதுதான் இன்றைக்கு நமது நாட்டில் ஜோஷிமாவில் நடக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே சூழலில் பாதுகாப்பு என்பது மிக மிக முக்கியமானது, வளர்ந்த நாடுகள், தங்களை தற்காத்துக் கொள்ள வளரும் நாடுகளின் மீது பழி போட்டு தப்பித்து விட முடியாது. இது ஒரு நாட்டின் பிரச்சனையோ, ஒரு ஊரின் பிரச்சனை அல்ல. மாறாக, ஒட்டுமொத்த உலகத்தின் பிரச்சனை என்பதை அனைத்து நாடுகளும் உணர வேண்டும் என்பதை இந்நூல் உரக்கப் பேசுகிறது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : சுப்ரபாரதிமணியன் | |
| பக்கம் | : 110 | விலை: 140 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 | |

சுழலும் உலகம்

# வியட்நாமின் புதிய அதிபர் வோ வான் துஆங் !



வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் 13வதுமத்தியகுழுக்கூட்டம்கடந்தமார்ச் 1ஆம் தேதியன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அதிபர் பொறுப்பிற்கான புதிய வேட்பாளராக வோ வான் துஆங் அறிமுகப்படுத்தப்பட்டார். 52 வயது நிறைவுற்ற இவர், வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் 16 உறுப்பினர்களைக் கொண்ட பொலிட்பீரோவில் உறுப்பினர் ஆவார். பொலிட்பீரோவின் (வயதில்) இளைய உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவர் கட்சியின் மத்திய குழுவிற்கு செயலாளராகப் பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்.

மார்ச் 02 ஆம் தேதியன்று நடைபெற்ற தேசிய சபையின் கூட்டத்தில் வோ வான் துஆங் புதிய அதிபராகத் தேர்வு செய்யப்பட்டார். அதற்கானத் தீர்மானம் அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. வியட்நாம் தேசத்து அரசியல் அமைப்பின்படி, உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு விவகாரங்களில் வியட்நாம் தேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவராகவும், அரசின் தலைமை பொறுப்பை வகிப்பவராகவும் அதிபர் விளங்குகிறார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு, பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்ததையொட்டி முன்னாள் அதிபர் யென் சூவான் ப்ஹுக் பதவி விலகினார். ஜனவரி மாதம் 17 ஆம் தேதியன்று கூடிய மத்திய குழு, யென் சூவான் ப்ஹுக் பொலிட்பீரோ மற்றும் மத்திய குழு உறுப்பினராகவும், வியட்நாம் அதிபராகவும் தொடரக் கூடாது என்பதை ஏற்றுக்கொண்டது.

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தின் போது, கடும் பின்விளைவுகளை உருவாக்கிய விதிமுறை மீறல்களில் இரண்டுதுணை பிரதமர்கள், மூன்று அமைச்சர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகள் ஈடுபட்டதற்கு பொறுப்பேற்பதாக யென் சூவான் ப்ஹுக் கூறியுள்ளார்.

ஜனவரி 5 அன்று கூடிய தேசிய சபை சம்பந்தப்பட்ட இரு துணை பிரதமர்களையும் நீக்கியுள்ளது. இரண்டு அமைச்சர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகள் கிரிமினல் குற்ற விசாரணைக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

# பிரான்சில் மார்ச் 7 முதல் தொழிலாளர்களின் காலவரையற்ற வேலைநிறுத்தம்: உலக தொழிற்சங்க சம்மேளனம் ஆதரவு




பிரான்சு நாட்டில் அதிபர் மேக்ரோன் திணிக்க முயற்சிக்கும் ஒரு சீர்திருத்த திட்டத்தை எதிர்த்து மார்ச் 7 முதல் அந்நாட்டு தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். இந்தப் போராட்டத்திற்கு 135 நாடுகளில் உள்ள 10 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உலக தொழிற்சங்க சம்மேளனம் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 19 ஆம் தேதியில் இருந்து தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களையும், 5 நாட்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களையும் தொழிலாளர்கள் மேற்கொண்டனர். எனினும் அரசாங்கம் அவர்களின் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. எனவே, அரசாங்கத்தைப் பணிய வைத்திட, நாட்டின் முக்கிய துறைகளில் ஒரு புதிய வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள தொழிற்சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். அதன் அடிப்படையில், இரயில்வே, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், வர்த்தகம், துறைமுகம், மின்துறை உள்ளிட்ட பல முக்கிய துறைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்க அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் துறைகளில் உள்ள பல தொழிற்சங்கங்கள் உலக தொழிற்சங்க சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்ததைப் போலவே, நடைபெறவுள்ள வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கும் உலக தொழிற்சங்க சம்மேளனம் அதன் உறுதிமிக்க ஆதரவைத் தெரிவித்துள்ளது. பிரான்சு நாட்டு தொழிலாளர்கள் மேற்கொள்ள இருக்கும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென உலக தொழிற்சங்க சம்மேளனம் அதன் இணைப்புச் சங்கங்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

# ஈகுவேடார் அதிபர் லாசோ பதவி விலகக் கோரி மாணவர்கள் போராட்டம்!




ஈகுவேடார் நாட்டில் ஊழல் மற்றும் போதை பொருள் கடத்தல் போன்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதையொட்டி அந்நாட்டின் அதிபர் ஜில்லெர்மோ லாசோ பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஈகுவேடார் மத்திய பல்கலைக்கழகத்தின் முன்பு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். செங்கொடிகளையும், "லாசோ வெளியேறு" என்று பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி பெருந்திரளான மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிபர் லாசோ பதவி விலக வேண்டும், அதற்கான அரசியலமைப்பு ரீதியிலான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் என்று ஈகுவேடார் பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டமைப்பு கருத்து தெரிவித்துள்ளது.

ஊழல் மற்றும் போதை பொருட்கள் கடத்தல் குற்றச்சாட்டுகள் மட்டுமின்றி பொது கல்விக்கான போதிய பட்ஜெட் ஒதுக்கீட்டைக் கூட லாசோ அரசாங்கம் உறுதிப்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும். மத்திய பல்கலைக்கழகத்திற்கு லாசோ நிர்வாகம் வழங்க வேண்டிய 10 மில்லியன் டாலர் நிதியும், கயாகில் பலக்லைக்கழகத்திற்கு வழங்க வேண்டிய 5 மில்லியன் டாலர் நிதியும் நிலுவையில் உள்ளது என்று மாணவர் கூட்டமைப்பின் தலைவர் நெரி படில்லா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊழல், போதை பொருட்கள் கடத்தல் மற்றும் இதர குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை இறுதி அறிக்கையை அங்கீகரிப்பது தொடர்பாக அந்நாட்டு தேசிய சபையின் அனைத்து கட்சி குழு விவாதிக்க உள்ளது. தேசிய சபையில் அதிபர் லாசோவிடம் விசாரணை மேற்கொள்ள சபை உறுப்பினர்கள் உரிய முன்மொழிவைத் தாக்கல் செய்வார்கள் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தி தொகுப்பு: அருண் அசோகன்

# எங்கே எனது வேலை?

## மார்ச் 23 முதல் ஏப்ரல் 2 வரை தொடர் பரப்புரைப் பயணம்

## ஏப்ரல் 2 திருச்சியில் இளைஞர் எழுச்சி மாநாடு

எங்கே எனது வேலை? எனும் முழக்கத்தோடு மார்ச் 23 மாவீரன் பகத்சிங் நினைவுநாளில் துவங்கி ஏப்ரல் 2 தியாகசெம்மல் பாலதண்டாயுதம் பிறந்தநாள் வரை அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தொடர் பரப்புரைப் பயணம் நடைபெற இருக்கிறது.

கன்னியாகுமரி, ஒசூர், சென்னை, வேதாரண்யம் ஆகிய நான்கு முனைகளில் துவங்கப்பட இருக்கிறது. நிறைவாக ஏப்ரல் 2 திருச்சி மாநகரில் நடைபெறும் இளைஞர் எழுச்சி மாநாட்டில் 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்க இருக்கிறார்கள்.

இதற்கான தயாரிப்பு பணிகளுக்காக அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் கூட்டு தமிழ்நாடு மாநிலக்குழுக்கூட்டம், தஞ்சாவூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேசன், மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் தினேஷ் சீரங்கராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர். கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் க.சந்தானம், வை.சிவபுண்ணியம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் முத்து உத்திராபதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கூட்டத்தில் இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி எங்கே எனது வேலை? பரப்புரை பயண மற்றும் இளைஞர் எழுச்சி மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து உரையாற்றினார். இதில், இளைஞர்பெருமன்ற மாநிலத் துணைத் தலைவர்கள் கு.ராஜேந்திரன், மோ.வெங்கடேசன், மாநிலத் துணைச் செயலாளர்கள் துரை.அருள்ராஜன், வே.வசந்தகுமார், இரா.தமிழ்பெருமாள், மாநிலப் பொருளாளர் உ.சிவாஜி காந்தி, மாணவர் பெருமன்ற மாநிலசெயலாளர் பா.தினேஷ், மாநிலப் பொருளாளர் க.இப்ராகிம், மாநிலத் துணைத் தலைவர்கள் வெ.நிருபன், ரா.விக்ரம், மாநிலத் துணைச் செயலாளர்கள் ஜெ.பி.வீரபாண்டியன், கே.பிரபு, முத்துலட்சமி உள்ளிட்டு மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், மார்ச் 23ந்தேதி முதல் ஏப்ரல் 2 வரை நடைபெறும் இளைஞர் எழுச்சி தொடர் பரப்பரை பயணம் மற்றும் திருச்சியில் நடைபெறும் இளைஞர் எழுச்சி மாநாட்டுக்காக இளைஞர் மாணவர்கள் 50 ஆயிரம் பேரை அணிதிரட்டுவது எனவும்,

தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் இடங்களில் சுவர் விளம்பரங்கள் செய்வது எனவும், நான்கு பயணக்குழுக்களையும் வரவேற்று 1000க்கும் மேற்பட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்களை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், பயணக்குழு மக்கள் அதிகம் நிறைந்த பகுதிகளில் நடைப்பயணமாக சென்று மக்களை சந்திப்பதோடு,

எங்கே எனது வேலை? பரப்புரைப் பயண நோக்கங்கள் குறித்து பிரசுரங்கள் வெளியிடுவது எனவும் முடிவுகள் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் தொடங்கும் பயணத்தை சுதந்திரப் போராட்ட வீரர் இரா.நல்லகண்ணு, ஒசூரில் தொடங்கும் பயணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், வேதாரண்யத்தில் தொடங்கும் பயணத்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.பழனிச்சாமி, கன்னியாகுமரியில் தொடங்கும் பயணத்தை சிபிஐ மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி ஆகியோர் தொடங்கி வைக்கிறார்கள்.

திருச்சியில் நடைபெறும் இளைஞர் எழுச்சி மாநாட்டில் சி.பி.ஐ. மாநில செயலாளர் இரா.முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், பி.சந்தோஷ்குமார், மாநில செயற்குழு உறுப்பினர் பி.பத்மாவதி, இளைஞர் பெருமன்ற அகில இந்திய தலைவர் சுக்ஜிந்தர் மகேசரி, பொதுச் செயலாளர் இரா.திருமலை ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.



### ஒசூர் பயணக்குழு:

மார்ச் 23 துவக்க நிகழ்ச்சி ஒசூர்
23, 24 கிருஷ்ணகிரி
25 தர்மபுரி
26 சேலம்
27 நாமக்கல்
27 ஈரோடு தெற்கு
28 ஈரோடு வடக்கு
29 கோவை
30 திருப்பூர் புறநகர்
31 திருப்பூர் மாநகர்
ஏப். 1 கரூர்
2 திருச்சி மாநாடு

### கன்னியாகுமரி பயணக்குழு

மார்ச் 23 துவக்க நிகழ்ச்சி: கன்னியாகுமரி
24 நெல்லை
25 தென்காசி
26 காலை தூத்துக்குடி
26 மாலை விருதுநகர்
27 விருதுநகர்
28 இராமநாதபுரம்
29 சிவகங்கை
30 மதுரை புறநகர், மதுரை மாநகர்
31 தேனி
ஏப். 1 திண்டுக்கல்
2 திருச்சி மாநாடு

### வேதாரண்யம் பயணக்குழு

மார்ச் 23 துவக்க நிகழ்ச்சி : வேதாரண்யம்,
23, 24, 25 நாகப்பட்டினம்
26, 27, 28 திருவாரூர்
29 மயிலாடுதுறை
30 தஞ்சை வடக்கு
31 தஞ்சை தெற்கு
ஏப். 1 புதுக்கோட்டை
2 திருச்சி மாநாடு

### சென்னை பயணக்குழு

மார்ச் 23 துவக்க நிகழ்ச்சி : தண்டையார்பேட்டை
23 வடசென்னை, மத்திய சென்னை, தென்சென்னை, பல்லாவரம்.
24 திருப்போரூர், செங்கல்பட்டு.
25 திருவள்ளூர்
26 இராணிப்பேட்டை
27 வேலூர்
28 திருப்பத்தூர்
29 திருவண்ணாமலை
30 திருக்கோவிலூர்
31 விழுப்புரம்
ஏப். 1 கடலூர்
2 திருச்சி மாநாடு

---

சங்கரன்கோவிலில்

## ஜனசக்தி சந்தா வழங்கும் விழா



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் 24வது அகில இந்திய மாநாட்டு அரசியல் பேரவை கூட்டம், ஜனசக்தி சந்தா வழங்கல் நிகழ்ச்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை தலைமையில் நடைபெற்றது.

முருகன், ஆர்.மனுவேல்ராஜன், ஏ. பழனிமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜெ.அந்தோணிராஜ் வரவேற்புரையாற்றினார். மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி. சிறப்புரையாற்றினார்.

ஏஐடியுசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.வேலாயுதம், மாவட்ட பொருளாளர் டி.சுப்பையா, மாவட்ட நிர்வாகிகள் பி.வேலு, எஸ்.மாரியப்பன், ஏ.பரமசிவன், எம்.எஸ்.கிட்டப்பா, பி.பாலசுப்பிரமணியன், இடை கமிட்டி செயலாளர்கள் எஸ்.ஜீவா, வி.சின்னவேல்சாமி எம்.கணேசன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினர். நகர செயலாளர் எஸ்.ஆறுமுகம் நன்றி கூறினார்.

---

## திரை மறைவு சதி வேலைகளை தொடங்கி விட்டது பாஜக: கே.சுப்பராயன் எம்.பி.

இந்திய அரசியலில், பாஜகவின் திரைமறைவு சதிவேலைகள் தொடங்கிவிட்டன என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழுத் தலைவரும், திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கே.சுப்பராயன் தெரிவித்துள்ளார்.

அவர் சமூக வலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில், 'இட்டுக்கட்டி உருவாக்கப்பட்ட தனது செல்வாக்கு, நாளுக்கு நாள் சரிந்த வண்ணமே இருப்பதை பாஜக நன்கு உணர்ந்து விட்டது!

எனவே, பாஜக தனக்கு எதிரான ஓட்டுகளை பல முனைகளாக சிதறடிக்க வைக்கிற சித்து விளையாட்டைத் தொடங்கி விட்டது!

எல்லா மாநிலங்களிலும் இந்தத் திருவிளையாடல் அரங்கேறிவிட்டது!

இஸ்லாமிய ஓட்டுகளை சிதறடிக்க பாஜகவின் அரசியல் ஆயுதம் ஒவைசி!

தமிழ்நாட்டில், தமிழர் என்ற பெயரில் தமிழர் ஓட்டுகளை சிதறடிக்க பாஜகவின் ஆயுதம் சீமான்!

வங்கத்தில் CBIயைக் கண்டு நடுங்கும் மம்தா!

தெலங்கானாவில் ஒய்.எஸ்.ஆர். ராஜசேகர் ரெட்டியின் மகள் கட்சி! மராட்டாவில் ஷிண்டே!

வேறு பல வட மாநிலங்களில் ஓட்டுக்களை சிதறடிக்க பாஜகவின் ஆயுதம் கெஜ்ரிவால்!

உத்தரப் பிரதேசத்தில் தயாராக இருக்கிறார் மாயாவதி!

காங்கிரசில் ஊசலாடும் நபர்களுக்கு தூண்டில் போடுதல்!

இப்படி எதிர்ப்பு வாக்குகள் ஒன்றுபட்டு விடாமல் தடுப்பதற்கு தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவது!

பல போட்டி முனைகளை திட்டமிட்டே உருவாக்குவதுதான் கேடுகெட்ட பாஜகவின் கில்லாடித்தனமான தேர்தல் தந்திரங்களாக உள்ளன!

தேச நலன், நாடாளுமன்ற ஜனநாயக முறை, அரசியல் சாசனத்தை பாதுகாக்க அக்கறை கொண்ட மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி இயக்கங்கள், தன் முனைப்பைக் கைவிட்டு ஒன்றுபடுவதும், ஒன்றுபடுத்துவதும் இன்றைய தலையாய அரசியல் தேவையாகும் என்பதை உணரவேண்டும்!' என்று கே.சுப்பராயன் தெரிவித்துள்ளார்.

**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 11.03.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

### 100 நாள் வேலைத் திட்டத்திற்கு போதிய நிதி ஒதுக்காத

# ஒன்றிய அரசை கண்டித்து விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ. 2.74 லட்சம் கோடி நிதியொதுக்கம் செய்ய வேண்டும்.**

**ஆண்டுக்கு நூறு நாள் வேலை என்பதை 200 நாட்களாக உயர்த்த வேண்டும்.**

**தினசரி குறைந்தபட்ச ஊதியம் ரூ.600 வழங்க வேண்டும்.**

**கண்ணியமான, சுயமரியாதை கொண்ட வாழ்க்கை அமைய, வீடில்லாத குடும்பங்களுக்கு தலா ரூ.6 லட்சம் முழுமானிய நிதி உதவி வழங்க வேண்டும்.**

**பட்டியல் சாதியினர், பழங்குடியினர் இளைய தலைமுறையினர் தொழில் தொடங்க குடும்பத்துக்கு தலா ரூ.10 லட்சம் முழு மானியம் வழங்க வேண்டும்**




என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் சங்கத்தின் ஒன்றிய தலைவர் ஏ. மூர்த்தி, ஆர்.வாசுதேவன், எம். மகாலிங்கம் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கே. உலகநாதன் கண்டன உரை நிகழ்த்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் இரெ.ஞானமோகன், பி.வி. சந்திரராமன், சிபிஐ ஒன்றிய செயலாளர் வி.ஜவஹர், சிபிஐ நகர செயலாளர் டி.பி.சுந்தர் ஆகியோர் ஒன்றிய அரசை கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினர். திருத்துறைப்பூண்டி ஒன்றியம் முழுவதிலுமிருந்து 3000 க்கும் அதிகமான தோழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னதாக தோழர்கள் அனைவரும் பட்டுக்கோட்டை சாலை அம்பேத்கர் சிலையிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தனர். ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**திருவாரூர்:** திருவாரூரில் சங்க ஒன்றிய செயலாளர் எஸ். சித்திரகனி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே.ஆர். ஜோசப் (எ) ஜீவா, மாவட்ட குழு உறுப்பினர் கே.புலிகேசி, சங்க மாவட்ட துணை செயலாளர் எம். நாகராஜன், சிபிஐ நகர செயலாளர் பழக்கடை எஸ். செல்வம், ஒன்றிய துணைத்தலைவர் எஸ்.பாஸ்கரன், துணை செயலாளர், கே. ஜெயச்சந்திரன், வி.ச.ஒன்றிய செயலாளர் டி.தியாகராஜன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, தவிச சவுந்திரபாண்டியன், துணை செயலாளர் மகாலிங்கம், தவிதொச மணிக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இராஜபாளையத்தில் தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன் தலைமையில், சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட நிர்வாககுழு வி.இரவி, இளைஞர்மன்ற பகத்சிங், ஏஐடியுசி முத்துமாரி, தவிச அய்யணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். சாத்தூரில் தவிதொச வட்ட செயலாளர் சகாதேவன் தலைமை ஏற்றார். சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் சாமிநாதன், நகர செயலாளர் ஜான்ராஜா, தஒவாஇ முருகேசன், மாதர் சங்க வட்ட செயலாளர் மணிமேகலை, இளைஞர்மன்ற சரவணக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஸ்ரீவில்லிபுத்தூரில் பலவேசம் தலைமையில் மாவட்ட நிர்வாககுழு பொண்ணுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, நகர செயலாளர் மூர்த்தி, துணை செயலாளர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர். திருச்சுழி ரெட்டியபட்டியில் வட்ட செயலாளர் செல்வம் தலைமையில் துணை செயலாளர் பெரியண்ணன், ஏஐடியுசி தங்கராஜ், இளங்கோ உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாகை:** நாகை மாவட்டம் கீழையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முன்பு தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய தலைவர் பாலாஜி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் பாஸ்கர், சிபிஐ மாநில குழு உறுப்பினர் செல்வம் ஆகியோர் விளக்க உரையாற்றினர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாவட்டத் தலைவர் டி.கே.ராஜா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன் , துணை செயலாளர் வி. சரவணன், சங்கத்தின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் கே.போஸ், துணை செயலாளர் கே.மதியழகன், எம்.பி.குமார், மாவட்ட குழு உறுப்பினர்கள் கே.குமரேசன், ஜி.எம்.சம்பத், விவசாயிகள் சங்கத் தலைவர் கே.ஆறுமுகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி மாவட்ட தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே.எஸ். அப்பாவு தலைமை தாங்கினார். மாவட்ட குழு உறுப்பினர் முருகேசன் முன்னிலை வகித்தார். இதில் ஏஐடியுசி மாநில நிர்வாகக் குழு வளர்மதி, மாதர் சங்கம் ரீதா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு கருணாநிதி, ஒன்றிய செயலாளர் செந்தில், மற்றும் நிர்வாகிகள் பால்ராஜ், மஞ்சப்பன், மலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய தலைவர் ஜி.ராஜகோபால் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் ஜி.பச்சாககவுண்டர் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்ட தலைவர் ஜி.மாதையன் ஆகியோர் பேசினர். நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் என்.முருகேசன், ஒன்றிய பொருளாளர் ஆர்.மல்லையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தின் விளக்கி சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை. மாதையன் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் சங்க ஒன்றிய துணைத்தலைவர் ஜி.சம்பத், ஒன்றிய துணைச்செயலாளர் அலமேலு மற்றும் திரளான தோழர்கள் கலந்துக் கொண்டனர்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர் ஆர் .மோகன் குமார் தலைமை தாங்கினார். பி.ரவிச்சந்திரன், பி.முனுசாமி, சி .ஏழுமலை, ஆர்.ராமன், வி.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞர் பெருமன்ற பொதுச் செயலாளர் திருமலை, விதொச மாவட்ட தலைவர் வே.முத்தையன், மாவட்ட செயலாளர் இரா.தங்கராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிர்வாகிகள் கே.சம்பத், எம்.எஸ்.மாதேஸ்வரன், என்.பத்ராசலம் வி.குப்புரங்கன் உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## குடும்பத் தலைவர்களாக உள்ள பெண்களுக்கு கூடுதலாக 50 நாட்கள் வேலை

- முதலமைச்சர் அறிவிப்பை வரவேற்கிறோம்
- தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் அறிக்கை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் பாஜக ஒன்றிய அரசின் வஞ்சக செயலைக் கண்டித்து, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மார்ச் 07 அன்று தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூபாய்.2.74 லட்சம் கோடி நிதியொதுக்கம் செய்ய வேண்டும்.

ஆண்டுக்கு நூறு நாள் வேலை என்பதை 200 நாட்களாக உயர்த்த வேண்டும்.

தினசரி குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 600/= வழங்க வேண்டும்.

கண்ணியமான, சுயமரியாதை கொண்ட வாழ்க்கை அமைய, வீடில்லாத குடும்பங்களுக்கு தலா ரூ.6 லட்சம் முழுமானிய நிதி உதவி வழங்க வேண்டும்.

பட்டியல் சாதியினர், பழங்குடியினர் இளைய தலைமுறையினர் தொழில் தொடங்க குடும்பத்துக்கு தலா ரூ 10 லட்சம் முழு மானியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மார்ச் 8 சர்வதேச பெண்கள் தின வாழ்த்துக் கூறிய தமிழ்நாடு முதலமைச்சர், “மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில், குடும்பத் தலைவர்களாக உள்ள பெண்களுக்கு கூடுதலாக 50 நாட்கள் வேலை தருவது” என்று அறிவித்துள்ளார். முதலமைச்சரின் அறிவிப்பை தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் நன்றி பாராட்டி வரவேற்கிறது.

இவ்வாறு தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் நா.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

